ISSN: 2582–5518




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ பிப்ரவரி. 01, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 114 ❖ ரூ.10

## ‘தேர்தல் உரை’ போலவே குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை: எதிர்க்கட்சிகள்

# விமர்சனம்

## இந்திய பொருளாதாரம், உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவெடுத்து. இந்தியாவின் வளர்ச்சி 7.5 சதவீதமாக உள்ளது; குடியரசுத் தலைவர்

**புதுடெல்லி , பிப். 1-**

**குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் நாடாளுமன்ற உரை, ‘தேர்தல் உரை’யைப் போன்று இருந்ததாக எதிர்க்கட்சிகள் கடுமையாக குற்றம்சாட்டியுள்ளன.**



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் குடியரசுத் தலைவரின் உரையுடன் நேற்று தொடங்கியது. இந்நிலையில், குடியரசுத் தலைவரின் உரை குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்.பி சசி தரூர், "குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நாடாளுமன்றத்தில் நிகழ்த்துவதற்கான உரை, தேர்தல் உரையைப் போல் இருக்குமாறு தயாரித்து அளித்திருக்கிறார்கள். அதைத்தான் அவர் வாசித்திருக்கிறார். ஆட்சியாளர்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அவையெல்லாம் குடியரசுத் தலைவரின் உரையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஏழ்மையை போக்கி இருப்பதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில், 81 கோடி மக்களுக்கு உணவுப் பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குடியரசுத் தலைவரின் உரை ஒருதலைபட்சமான தொகுப்பு. பல்வேறு முக்கிய விவகாரங்கள் விடுபட்டுள்ளன. வாக்களிக்கச் செல்லும்போது மக்கள் அவற்றை நினைவில் கொண்டு செல்வார்கள் என்று நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

மற்றொரு காங்கிரஸ் எம்பியான கவுரவ் கோகாய், "உண்மையை மறைக்க அரசு முயன்றுள்ளதாகத் தெரிகிறது. சண்டிகர் மேயர் தேர்தலில் ஜனநாயகம் நசுக்கப்பட்டுள்ளது. அதேபோல், குடியரசுத் தலைவரின் உரையில் நாட்டின் பொருளாதார சமூக பிரச்சினைகள் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடிக்கு யாரெல்லாம் நெருக்கமாக இருக்கிறார்களோ அவர்கள் மத்திய பட்ஜெட் மூலம் பயனடைவார்கள். இம்முறையும் அது தொடரும் என நினைக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

சமாஜ்வாதி கட்சி எம்பியான டேனிஷ் அலி, "குடியரசுத் தலைவரின் உரையில் எந்த சிறப்பும் இல்லை. வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. ஆனால், யாருக்கு? உண்மைதான், இந்த அரசின் நண்பர்களில் சிலர் வேலைவாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். இந்த அரசுக்கு சொல்வதற்கு எதுவும் இல்லை" என விமர்சித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் இத்தகைய விமர்சனங்களை கடுமையாக எதிர்த்துள்ள பாஜக எம்பி திலிப் கோஷ், "குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய உரை குறித்து இளைஞர்களிடம் கேட்க வேண்டும்; எதிர்க்கட்சிகளிடம் அல்ல. நாட்டின் இளைஞர்கள் திறமையானவர்கள். அவர்கள் பல்வேறு புத்தாக்க நிறுவனங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இண்டியா கூட்டணியில் இருந்தவர்கள் பிரதமரோடு சண்டையிட தயாராக இருந்தார்கள். ஆனால், தற்போது அந்த அணியின் கேப்டனே வெளியேறி விட்டார். எனவே, தற்போது அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவரின் உரை குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா தேனி, "நாட்டின் வளர்ச்சிக்காக பிரமதர் மோடி மிகச் சிறந்த முறையில் பாடுபட்டு வருகிறார். எனவே, எதிர்க்கட்சிகளிடம் கேட்பதற்கு ஒன்றுமே இல்லை" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், "கடந்த சில ஆண்டுகளாக உலகம் இரண்டு போர்களையும், கோவிட் பெருந்தொற்றையும் சந்தித்தது. இருந்தபோதிலும், எனது அரசு பணவீக்கத்தை கட்டுக்குள் வைத்திருந்தது. குடிமக்கள் மீது சுமையை ஏற்றவில்லை. 2023-ம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆண்டு. சர்வதேச நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்திய பொருளாதாரம், உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவெடுத்தது. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளாக இந்தியாவின் வளர்ச்சி 7.5 சதவீதமாக உள்ளது" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், “பல நூற்றாண்டுகளாக அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்தக் கனவு இப்போது நிறைவேறியுள்ளது. மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான அயோத்தி ராமர் கோயில் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற கனவு நிறைவேற்றப்பட்டுள்ளது. அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு பால ராமர் சிலையை 5 நாட்களில் 13 லட்சம் பேர் தரிசித்துள்ளனர்.

அதேபோல் ஜம்மு காஷ்மீரில் இருந்து 370வது பிரிவைரத்து செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்பினர். இப்போது, சட்டப்பிரிவு 370 என்பதும் வரலாறாக மாறிவிட்டது. மேலும், இந்தப் நாடாளுமன்றம் முத்தலாக் நடைமுறைக்கு எதிராக கடுமையான சட்டத்தை இயற்றியுள்ளது” என்று குடியரசுத் தலைவர் தனது உரையில் பேசினார்.

## துரோகத்தின் மறுபெயர் எட்டப்பன் அல்ல எடப்பாடி பழனிசாமி தான் முன்னாள் எம்எல்ஏ இரத்தினசபாபதி தாக்கு

**புதுக்கோட்டை , பிப். 1-**

**துரோகத்தின் மறுபெயர் எட்டப்பன் அல்ல எடப்பாடி பழனிசாமி தான் என அறந்தாங்கி முன்னாள் எம்எல்ஏ இரத்தினசபாபதி கடுமையாக விமர்சித்துள்ளார்.**



தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகளை சந்திப்பதற்காக பிப்ரவரி 5ஆம் தேதி திங்கள்கிழமை புதுக்கோட்டை மாலையீட்டில் உள்ள ஏடிஆர் திருமண மண்டபத்திற்கு வருகைதர உள்ளார். இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆயத்தப் பணிகள் தொடர்புடைய கூட்டம் புதுக்கோட்டை நெல்லுமண்டி தெருவில் உள்ள வடக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ராஜே.ராஜசேகரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் எம்எல்ஏ. இரத்தினசபாபதி, ஞான கலைச்செல்வன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆலோசனை மேற்கொண்டனர். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தரும் ஓபிஎஸ்ஐ வரவேற்பதற்காக பிரம்மாண்ட வரவேற்பு கொடுக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் செய்தியாளர்களை சந்தித்த இரத்தினசபாபதி கூறியதாவது; கொடநாடு கொலை வழக்கில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சுற்றியே குற்றச்சாட்டு பலமாக எழுந்துள்ளது. எடப்பாடி தனது ஊரிலே துரோகத்தை தொழிலாக கொண்டு வளர்ந்தவர் அவர் சசிகலாவுக்கும் ஓபிஎஸ்க்கும் தற்போது பிரதமர் மோடி வரைக்கும் துரோகம் செய்து வாழ்ந்து

வருபவர். துரோகத்தின் மறுபெயர் எட்டப்பன் அல்ல எடப்பாடி பழனிசாமி பெயர்தான் என்றவர். இந்தியா கூட்டணி நெல்லிக்காய் மூட்டை போல கலகலத்து வருகிறது. தேர்தல் தேதி அறிவிக்கும் வரை கூட இந்தியா கூட்டணி தாக்கு பிடிக்காது என்றும் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற ஆசை எல்லா இந்திய மக்கள் மனதிலும் உள்ளது. அதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது என்றார்.

அதனை தொடர்ந்து ராஜசேகரன் பேசுகையில் ஓபிஎஸ் வருகையால் புதுக்கோட்டை தற்போதே குதூகலமாகிவிட்டது தொண்டர்கள் மிகுந்த உற்சாகமாக உள்ளனர். தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு ஓபிஎஸ்க்கு உற்சாகமான வரவேற்பு கொடுப்பதுடன் தொண்டர்கள் என்றுமே ஓபிஎஸ் பக்கம் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் தன்னெழுச்சியாக கூட்டம் நடைபெறநடைபெறும் என்று தெரிவித்தார்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

மனிதனுக்கு எந்த அளவு
அறிவு இருக்கிறதோ
அதே அளவு
முட்டாள்தனமும் அவன்
மூலையில் எங்கோ
ஒரிடத்தில் இருக்கிறது




# அன்னவாசல் ஒன்றியத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கல்லூரி களப்பயணம்



அன்னவாசல் , பிப். 1-

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் மூலமாக புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் வழிகாட்டுதல்படி அன்னவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட 14 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் உயர் கல்வி வழிகாட்டி மூலமாக கல்லூரி களப்பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனடிப்படையில் 12ஆம் வகுப்பு முடித்துவிட்டு உயர் கல்வியை தெரிவு செய்யும் நோக்கில் அரசு மேல்நிலைப்பள்ளி அன்னவாசல், இலுப்பூர், மலைக்குடிப்பட்டி, இராப்பூசல் , கீழக்குறிச்சி, நார்த்தாமலை , மண்ணவேளாம்பட்டி , மருதாந்தலை, சத்தியமங்கலம், காவேரி நகர் , முக்கணாமலைப்பட்டி , பரம்பூர், வயலோகம் ஆகிய பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் 490 மாணவர்கள் குடுமியான்மலையில் உள்ள அரசினர் வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

களப்பயணத்தின்போது வேளாண்மை படிப்பினை தேர்வு செய்ய எவ்வளவு மதிப்பெண்கள் எடுக்க வேண்டும், 7.5% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கல்லூரியில் அனுமதிக்கப்படும் இடங்கள், பயிர் மேலாண்மை , மண் பரிசோதனை செய்தல் , பூச்சிகளை கட்டுப்படுத்துதல், பல்லுயிர் பெருக்கம் ஆகியன பற்றிய நேரடி வகுப்புகள் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும் ஆய்வுக்கூடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று என்ன ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறித்து விரிவாகும் விளக்கமாகவும் கல்லூரி பேராசிரியர்கள் வகுப்பெடுத்தனர் .

களப் பயணத்திற்கான ஏற்பாடுகளை வட்டார வள மைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி , அன்னவாசல் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பவுல்ராஜ் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டையில் இலவச தையல் மெஷினுடன் கூடிய மூன்று மாத தையல் பயிற்சி துவக்கம்



புதுக்கோட்டை , பிப். 1-

புதுக்கோட்டை செம்பியன் சமுதாயகல்லூரி (NIMAR FOUNDATION) சார்பில் புதுக்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் பயன்பெறும் வகையில் இலவச தையல் மெஷினுடன்கூடியமூன்றுமாத தையல் மற்றும் ஆரி பயிற்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டு பயிற்ச்சியின் துவக்கவிழா நேற்று நடைபெற்றது.

இவ்விழாவினை, புதுக்கோட்டை மாவட்ட தாட்கோ மேலாளர் அனித் விமலின் தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். கோகுலம் மகளிர் ஆடையக வடிவமைப்பாளர் லாவண்யா இந்த பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரி தாளாளர் முகம்மது ஃபைசல் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டுகளை கல்லூரி ஒருங்கிணைப்பாளர் யோகேஸ்வரி மற்றும் கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள் செய்திருந்தனர்.



மதுரை மாவட்ட பொதுப்பணித்துறையில் நீர் வளத்துறை பிரிவு கண்காணிப்பாளராக பணிபுரியும் ஆர். ராமசாமி இன்று பணி ஓய்வு பெற்றார். அவரை பாராட்டி சக ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# எழுத்தாளர் அகிலனின் 36-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு



பெருங்களூர் : பிப். 1, புதுக்கோட்டை மாவட்டம், பெருங்களூரில் பிறந்தவர் பி.வி. அகிலாண்டம் என்ற அகிலன். தமிழுக்காக முதன் முதலில் சித்திரப் பாவை நாவலுக்கு ஞானபீடம் விருதினை பெற்றவர்.

சாகித்ய அகாடமி மற்றும் தமிழக அரசின் பல்வேறு விருதுகளை பெற்றும், தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகப் போரடியும் தனது கருத்துக்களை சிறுகதையிலும், நாவலிலும் மட்டுமல்லாது தனது செயலாலும் நடைமுறைப்படுத்தியும், சுதந்திரப் போராட்ட உணர்வை மக்களிடையே உருவாகக் காரணமாக இருந்தவரின் நினைவு தினம் பெருங்களூர் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், அகிலன் நினைவு இலக்கிய மன்றத்தின் சார்பில் நேற்று நடைப்பெற்றது.

அவர் எழுதிய சிறுகதை மற்றும்புதினங்களைக்கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு தலைமையாசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர்கள் , மாணவ மாணவியர், பெற்றோர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இறுதியில் இவ்விழாவினை ஒருங்கிணைத்த புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவை செயலர் மு.மாரிமுத்து அகிலனின் நினைவலைகளை பகிர்ந்து கொண்டு நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளியில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு



புதுக்கோட்டை , பிப். 1-

ஜனவரி 30 மகாத்மா காந்தி மறைந்த தினமான மாவீரர் தினத்தையொட்டி பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியானது மாணவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. மாணவர்களிடையே சாதிய வேற்றுமை பாராட்டுதலை ஒழித்தல், மாணவர்கள் மத்தியில் சகோதர உணர்வை மேம்படுத்துதல் மற்றும் அன்பையும் பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் வளர்த்தல் குறித்து உறுதிமொழியினை புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல் நிலைப் பள்ளியில், பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் மாணவர்கள் எடுத்துக் கொண்டனர்.

உறுதிமொழியினை உடற்கல்வி ஆசிரியர் சரவணன் அவர்கள். வாசிக்க மாணவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை பள்ளி முதல்வர் சிவப்பிரகாசம், ஆசிரியர்கள் நாடிமுத்து, இயலரசன், கவிதா, ரவி, பிரகாசம் ஆகியோர் செய்திருந்தனர்.

# ஆலங்குடி முன்னாள் எம்எல்ஏ தோழர் எஸ்.ராஜசேகரன் காலமானார்



புதுக்கோட்டை : பிப். 1-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழரும் ஆலங்குடி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான தோழர் எஸ்.ராஜசேகரன் (82) உடல் நலக்குறைவால் நேற்று காலமானார். இறுதி நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலும் 60 ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர். தோழர் எஸ்.ராஜசேகரன் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக் குழு உறுப்பினராக செயல்பட்டவர். புதுக்கோட்டை மாவட்டம் பிறிந்த பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் மாவட்ட குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு நிலைகளில் பணியாற்றி நான்கு முறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக திறம்பட பணியாற்றியவர். விவசாயிகளுக்காக, தொழிலாளர்களுக்காக எண்ணற்ற போராட்டங்களை தலைமையேற்று நடத்தியவர்.

இரண்டு முறை புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும் கடந்த 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஆலங்குடி தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராகவும் மக்களால் தேர்வு செய்யப்பட்டு மிகச் சிறந்த மக்கள் பிரதிநிதியாக பணியாற்றினார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த அவர் மாவட்ட செயற்குழு உறுப்பினராக பல ஆண்டு காலம் பணியாற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிவளர்ச்சிக்கும், புதுக்கோட்டை மாவட்ட உழைப்பாளி வர்க்கத்திற்கும் மிகச்சிறந்த மக்கள் தலைவராக பணியாற்றினார்.

கடந்த சில வருடங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த தோழர் எஸ்.ராஜசேகரன், உடல் நலம் தீவிரமாக பாதிக்கப்பட்ட நிலையில் புதுக்கோட்டை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார். தோழர் எஸ். ராஜசேகரனுக்கு அமராவதி என்ற மனைவி மற்றும் ஜீவானந்தம் என்ற மகனும், கல்பனா என்ற மகளும் உள்ளனர்.

தோழர் எஸ்.ராஜசேகரன் உடல் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, குலமங்கலம் வடக்கு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டு இன்று நல்லடக்கம் நடைபெறுகிறது.

# ஆவுடையார்கோவிலில் கிராமிய கரக ஆட்டத்துடன் கள்ளச்சாராய விழிப்புணர்வு பேரணி



ஆவுடையார்கோவில் : பிப். 1-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து கள்ளச்சாராய விழிப்புணர்வுபேரணிதொடங்கி நடைபெற்றது.

ஆவுடையார் கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் கள்ளச்சாராய விழிப்புணர்வு பேரணி கிராமிய கரக ஆட்டத்துடன் தொடங்கியது. பேரணியை வட்டாட்சியர் மார்ட்டின் லூர்துகிங், தொடங்கி வைத்தார். பேரணியில் கல்லூரி மாணவிகள் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நகரின் முக்கிய வீதிகளான வடக்கு வீதி, கீழ வீதி, தெற்கு வீதி, மேல வீதி வழியாக வட்டாட்சியர் அலுவலகத்தில் பேரணி முடிவடைந்தது. பேரணியில் பொதுமக்கள் மற்றும் இளைஞர் நலன் கருத்தில் கொண்டு கள்ளச்சாரத்துக்கு எதிராகவும், மது அருந்துதல் மது அருந்தி வாகனம் ஒட்டுதல் மற்றும் போதைப்பொருட்கள் தவறாக பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு எதிராக விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை பொதுமக்களிடம் வட்டாட்சியர் வழங்கினார்.

பேரணியில் கலால்வருவாய் ஆய்வாளர் முத்தரசன், அலுவலர்கள் காமராஜ், வினோத்குமார் மற்றும் அலுவலக அதிகாரிகள், பாரதிதாசன் கலைக்கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அவசரநிலை பிளாஸ்டிக் சர்ஜரி செய்து ஒட்டுறுப்பு மறு சீரமைப்பு நிபுணர்கள் சாதனை




மதுரை, பிப். 1-

ஒரு உற்பத்தி தொழிலகத்தில் நிகழ்ந்த விபத்தில் 30 வயதான பெண் பணியாளரின் உச்சந்தலை தனியாக பிரிந்து வந்துவிட்டதால், ஒட்டுமொத்த மண்டையோடும், முன்னந்தலையும், இடது காதின் மூன்றில் இரண்டு பகுதியும் வெளியே தெரிந்த நிலையில் அதை சரி செய்வதற்காக மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 7 மணி நேர அவசரநிலை பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டது.

சேதமடைந்த இரத்தக்குழாய்கள் மற்றும் தலைமுடி போன்ற மெல்லிய நுண்குழல்களை விரைவாக அடையாளம் காண்பதும் இரத்தஓட்டத்தை மீண்டும் கொண்டுவர அவைகளை இணைப்பதுமேஇந்தசிக்கலான அறுவைசிகிச்சையில் முக்கிய சவாலாக இருந்தது

நீண்ட நேரம் நடைபெற்ற இந்த சிக்கலான அறுவைசிகிச்சை முடிந்து சில மணி நேரங்கள் கழித்து மறுபடியும் பொருத்தப்பட்ட உச்சந்தலையின் ஒரு பகுதியில் இரத்தஓட்டம் உகந்த அளவுக்கும் குறைவாக இருந்தது கண்டறியப்பட்டதால், Microvascular Anastomosis என அழைக்கப்படும் மருத்துவ செயல்முறையை மருத்துவர் குழு திரும்பவும் செய்ய வேண்டியிருந்தது. மதுரையில் ஒரு எளிய குடும்ப பின்னணியைச் சேர்ந்த இப்பெண்மணிக்கு உரிய நேரத்தில் செய்யப்பட்ட இந்த அறுவைசிகிச்சைகள், விபத்தின் காரணமாக சிதைவுற்றிருந்த தலை மற்றும் முக பகுதிகளை சீர்செய்திருக்கிறது. இந்த அறுவைசிகிச்சைகளை உடனடியாக செய்திருக்காவிட்டால், அவரது வாழ்நாள் முழுவதும் இந்த கோரமான தோற்றத்துடனே அவர் வாழ்ந்திருக்க வேண்டியிருக்கும்.

இத்தகைய சிகிச்சைக்கு உரிய காலஅளவான கோல்டன் ஹவர் (6 மணி நேரங்கள்) என்பதையும் கடந்து, இந்நோயாளி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டிருந்த போதிலும், டாக்டர். பினிட்டா ஜெனா, பிளாஸ்டிக் சர்ஜரி துறையின் தலைவர் மற்றும் டாக்டர். பவ்யா மனோஷிலா ஆகியோர் தலைமையிலான அறுவைசிகிச்சைநிபுணர்களது குழு, கிழிக்கப்பட்டிருந்த உச்சந்தலையைவெற்றிகரமாக மீண்டும்பதியவைத்து, சரியாக பொருத்தியிருக்கிறது. 2023 டிசம்பர் 6 ஆம் தேதியன்று செய்யப்பட்ட இந்த அறுவைசிகிச்சைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு இந்நோயாளி படிப்படியாக உடல்நலம் தேறி குணமடைந்தார். மீண்டும் ஒட்ட வைக்கப்பட்ட அவரதுதலையில் முடி வளர்ச்சிக்கான அறிகுறிகள் தோன்றின. அதைத் தொடர்ந்து, நலமுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர் இப்போது, அவரது வழக்கமான வாழ்க்கை செயல்பாடுகளை மேற்கொள்ள தயாராக இருக்கிறார்.

உச்சந்தலையில் சருமம் மட்டுமின்றி, சருமத்திற்கு கீழே உள்ள திசு போன்ற பல அடுக்குகளும் மற்றும் சிறு இரத்தநாளங்களின் நுட்பமான வலைப்பின்னலும் இருக்கின்றன. இதுகண்புருவப் பகுதியிலுள்ள முன்னந்தலை பகுதி வரை தொடர்கிறது; இதுவே, முக உணர்வுகளை வெளிப்படுத்த தசைகளை ஏதுவாக்குகிறது. மறுபதிய அறுவைசிகிச்சையின் இலக்கு என்பது. இரத்த ஓட்டத்தையும், நரம்புகளின் இயக்கத்தையும் மீண்டும் நிலைநாட்டுவது மற்றும் துண்டிக்கப்பட்ட அல்லது பிரிந்து வந்துவிட்ட உடல்பகுதியின் ஒட்டுமொத்த இயங்குதிறனை சீர்செய்வது என்பதே.

இது குறித்துப் பேசிய மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவ நிர்வாகி டாக்டர் கண்ணன், உச்சந்தலையில் ஏற்பட்ட கிழிசலின் தீவிரத்தன்மை இதனை ஒரு அரிதான நேர்வாக ஆக்கியிருந்தது. அத்துடன், சிகிச்சைக்கு உரிய நேரத்தைக் கடந்து, இம்மருத்துவமனைக்கு காயமடைந்த நோயாளி அழைத்து வரப்பட்டிருந்தார். அதுமட்டுமல்லாமல், கிழிந்திருந்த உச்சந்தலைப் பகுதி மருத்துவ குழுவினரிடம் ஒப்படைக்கப்படும் வரை முறையாக பாதுகாக்கப்படாத நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தது. இவையெல்லாம் ஒருங்கிணைந்து, அறுவைசிகிச்சைநிபுணர்களது குழுவிற்குகூடுதல்சவால்களை ஏற்படுத்தியிருந்தன. எனினும், இப்பிரச்சனைகளையும் மீறி மருத்துவ நிபுணர்கள் சிறப்பாக செயல்பட்டு, இந்நோயாளிக்கு நிரந்தர தீர்வை வழங்கியிருக்கின்றனர். பணியிடத்தில் பாதுகாப்பு வழிகாட்டல்கள் முறையாக அமல்படுத்தப்பட்டு, அவைகளை சரியாக பின்பற்ற பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டிருக்குமானால், இத்தகைய எதிர்பாராத, அரிதான விபத்துகள் நிகழாமல் தவிர்த்திருக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக டாக்டர் பினிட்டா ஜெனா கூறியதாவது 'மதுரையில், வண்டியூர் என்ற இடத்தைச் சேர்ந்த இப்பெண், நட்டுகள் மற்றும் போல்ட்டுகளை தயாரிக்கின்ற ஒரு உற்பத்தி தொழிலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். விபத்து நடந்த நாளன்று, உற்பத்தி பிரிவில் பணியிலிருந்த போது சுழலும் இயந்திரப் பகுதியில் இவரது தலைமுடி எதிர்பாராத விதமாக சிக்கிக் கொண்டது. அடுத்த கணமே அவரது உச்சந்தலையானது தலைப்பகுதியிலிருந்து மிக வேகமாக பிரிந்து வந்துவிட்டது. இந்த கிழிசல் எந்த அளவிற்கு மோசமானதாக இருந்ததென்றால், அவரது ஒட்டுமொத்த மண்டையோடு, முன்னந்தலை மற்றும் அவரது இடது காதின் மூன்றில் இரு பகுதி முழுமையாக வெளியில் தெரிந்தது. விபத்து நடந்ததிலிருந்து 6 மணி நேரங்களுக்குப் பிறகே இப்பெண் நோயாளி மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார் உடனடியாக தீவிர சிகிச்சை மேற்கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட பள்ளிகளில் வினா விடை புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி



அரியலூர் : பிப். 1-

அரியலூர் மாவட்ட பள்ளிகளில், தமிழ் பண்பாட்டு பேரமைப்பு சார்பில், வினா, விடை புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அரசு பள்ளிகளில், பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளில், குறைந்த மதிப்பெண் வாங்கும் மாணவ, மாணவிகளின் கல்வித்திறனை ஊக்குவிக்கும் வகையில், அரியலூர் மாவட்ட தமிழ் பண்பாட்டு பேரமைப்பு சார்பில், மாவட்டம் முழுவதும் மாணவ, மாணவிகளுக்கு, வினா, விடை புத்தகங்கள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட கோவிந்தபுரம், வாரியங்காவல், இலையூர், செங்குந்தபுரம், சின்னவளையம், உட்கோட்டை, தேவாமங்கலம், தா.பழூர், தென்கச்சி பெருமாள் நத்தம், காரைக்குறிச்சி, சிலால், பெரியாக்குறிச்சி, மணப்பத்தூர், அயன் தத்தனூர், தளவாய், குறிச்சிக்குளம், கொடுக்கூர், குவாகம், நல்லாம்பாளையம், முத்துவாஞ்சேரி, குணமங்கலம், சுண்டக்குடி, நாகமங்கலம், ஜமீன் சுத்தமல்லி, விளாங்குடி, சிறுவளூர், கல்லங்குறிச்சி, அயன் ஆத்தூர், தேளூர், வெற்றியூர் திருமானூர் திருமழபாடி கீழக் காவட்டாங்குறிச்சி, சன்னாவூர், வாரணவாசி உள்ளிட்ட ஊர்களின் அரசுப்பள்ளிகளில் கல்வி பயிலும் 10-ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு, வினா, விடை கையேடு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள் சீனி. பாலகிருஷ்ணன், டாக்டர் கதிர் கணேசன், நல்லப்பன் ஆசிரியர், கேவி.புகழேந்தி, புலவர் சி.இளங்கோ, ஜோதி ராமலிங்கம், செல்லபாண்டியன், அஞ்சை இராவணன், தா.பழூர் குணசேகரன், துரை செல்வராஜ், தமிழ்களம் இளவரசன் மற்றும் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்போரூர் ஒன்றியம் மற்றும் திருக்கழுக்குன்றம் ஒன்றிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் , தலைமையில் பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்கினார். மேலும் நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் , திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி , செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர், இதயவர்மன் , திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்,முன்னாள் எம் எல் ஏ தமிழ்மணி, திருக்கழுக்குன்றம் ஒன்றிய குழு பெருந்தலைவர் அரசு தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் எம் எல் ஏ அன்புசெழியன் , திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வேளாண்மை ஆத்மா, குழு தலைவர் சேகர் , திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவர் பேரூர் செயலாளர் தேவராஜ் , திருப்போரூர் ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் சத்தியாசேகர், அரசு அதிகாரிகள், தி.மு.க கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரிதிநிதிகள் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர் .

## செம்பனார்கோவிலில் கேப்டன் விஜயகாந்தின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



செம்பனார்கோவில், பிப். 1-

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனரும், தமிழக முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான பத்மபூஷன் புரட்சி கலைஞர் கேப்டன் விஜயகாந்த் கடந்த ஆண்டு டிசம்பர் 28-ஆம் தேதி மறைந்தார். அவரின் நினைவை போற்றும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள தேமுதிக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மௌன ஊர்வலம் பட திறப்பு நிகழ்ச்சி மற்றும் அன்னதானம் வழங்கி வருகின்றனர். அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்ட தேசிய முற்போக்கு திராவிட கழக மாவட்ட அவைத்தலைவரும், பரசலூர் ஒன்றிய கவுன்சிலருமான கே.எஸ். கிருஷ்ணன் தலைமையில் தேமுதிக நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர்கள் செம்பனார்கோவில் கீழ முக்கூட்டில் இருந்து மேல முக்கூட்டு வரை அமைதி ஊர்வலமாக வந்து பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டு இருந்த கேப்டன் விஜயகாந்தின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மௌன அஞ்சலி மற்றும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநில விவசாய அணி செயலாளர் பொன். பாலகிருஷ்ணன், செம்பை வடக்கு ஒன்றிய செயலாளர் ராஜா என்கிற ராமகிருஷ்ணன், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வைத்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர்.ஜலபதி கலந்து கொண்டு கேப்டன் விஜயகாந்திர்க்கு புகழ் அஞ்சலி செலுத்தி உரையாற்றினார். தொடர்ந்து தேமுதிக நிறுவன தலைவரும் நடிகருமான கேப்டன் விஜயகாந்த்திற்கு ஐந்து நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மௌன ஊர்வலத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் ஜே.ஜே.ராஜ்குமார், சி.டி. பாண்டியன், எம்,கனிமொழி, பொதுக்குழு உறுப்பினர்கள் சுபாஷ் சந்திர போஸ், வி.செல்வம், பண்ணை சொ பாலு, முகமது முனாப், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் எஸ்பி ஆர் பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் ஏ பிரபு, அகோர மூர்த்தி, தரங்கம்பாடி பேரூராட்சி செயலாளர் முத்தழகன், தொழிற்சங்க தலைவர் ஜெயபால், தொழிற்சங்க துணை தலைவர் ராமகிருஷ்ணன், சீர்காழி முன்னாள் பேரூர் நகர செயலாளர் செந்தில், மகளிர் அணி பூங்கோதை துணைச் செயலாளர் மல்லிகா மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைத்துக் கட்சி பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை, தேசிய போக்குவரத்து 35 வது மாத விழிப்புணர்வு நிகழ்ச்சி



சென்னை, பிப். 1-

சென்னை, போக்குவரத்து பெருநகர் காவல் அண்ணா நகர் உட்கோட்டம் வடக்கு மாவட்டம் ரெட்டேரி சிக்னல் முதல் ராஜமங்கலம் சிக்னல் வரை நூற்றுக்கு மேற்பட்ட பி.எஸ்.எம். வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள் பேண்ட் வாத்திய இசை முழங்க (ட்ராலி) பதாகைகள் ஏந்தி நடை பயண பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் அ.சுந்தர்ராஜன் கொடி அசைத்து நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். போக்குவரத்து ஆய்வாளர் ஜெயக்குமார் தலைமை தாங்கினார். போக்குவரத்து உதவி ஆய்வாளர் காசி விஸ்வநாதன் அவர்களது தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. உதவி ஆய்வாளர் வில்சன் கிருபா ராஜ் மற்றும் ஆய்வாளர்கள் காவலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு சாலை ஓரம் கடையில் வியாபாரம் செய்ய செல்லும் பொழுது ரோட்டில் வாகனத்தை நிறுத்தக்கூடாது, சிக்னல்போட்டவுடன்வாகனத்தை நிறுத்த வேண்டும் மீறி செல்லக்கூடாது, ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டும் என்றும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டக்கூடாது என்றும் வாகனம் அளவுக்கு மீறி அதிவேகமாக பயணம் செய்யக்கூடாது என்றும் செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டக்கூடாது என்றும் சாலைவிதிகளை பின்பற்றுமாறு பல்வேறு அறிவுறுத்தல்கள் பொதுமக்களுக்கு போக்குவரத்து காவல்துறை விளக்கம் அளித்தனர்.

## தமிழகத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்த திமுக அரசு ஒருபோதும் அனுமதிக்காது - முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, பிப். 1-

"தமிழகத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதைத் திமுக அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மதநல்லிணக்கத்துக்கு எதிரான பாஜக அரசின் நாசகாரச் செயல்களையும், அதற்குத் துணைபோகும் அதிமுகவின் நயவஞ்சக நாடகங்களையும்நாட்டுமக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டினுள் சிஏஏ-வை கால்வைக்க விடமாட்டோம்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், ஏழு நாட்களில் மேற்கு வங்கம் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டம் (சிஏஏ) நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார் பாஜகவைச் சேர்ந்த மத்திய இணையமைச்சர் ஒருவர். இலங்கைத் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் எதிரான குடியுரிமை திருத்தச் சட்டம் (சிஏஏ) ஆனதற்கு முழுமுதற்காரணமே நாடாளுமன்றத்தில் அதிமுக ஆதரித்து வாக்களித்ததுதான்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும் தோழமை இயக்கங்களுடன் இணைந்து மிகப் பெரிய அளவில் போராட்டங்களை நடத்தியதுடன், இரண்டு கோடிப் பேரிடம் கையெழுத்து பெற்று அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது திமுக. 2021-ல் ஆட்சிக்கு வந்த உடனேயே குடியுரிமை திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானமே நிறைவேற்றினோம்.

தமிழகத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதைத் திமுக அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மதநல்லிணக்கத்துக்கு எதிரான பாஜக அரசின் நாசகாரச் செயல்களையும், அதற்குத் துணைபோகும் அதிமுகவின் நயவஞ்சக நாடகங்களையும் நாட்டு மக்கள்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். உறுதியாகச் சொல்கிறேன் தமிழ்நாட்டினுள் சிஏஏ-வை கால்வைக்க விடமாட்டோம்", என்று அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, மத்திய துறைமுகம், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை இணை அமைச்சர் சாந்தனு தாக்குர் கொல்கத்தாவில்செய்திசேனல் ஒன்றுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், "சிஏஏ விரைவில் அமல்படுத்தப்படும், இந்த சட்டம் இன்னும் ஏழு நாட்களுக்குள் செயல்படுத்தப்படும். இது நான் அளிக்கும் உத்தரவாதம்" என்று கூறியிருந்தார்.



▶ "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்பாடி வட்டம், பொன்னை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



▶ சென்னை பள்ளிக்கரணையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் பாரதிய ஜனதா கட்சி சென்னை கிழக்கு மாவட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இணைந்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை கொண்டாடினர். சென்னை கிழக்கு மாவட்ட பாஜக செயலாளர் லதா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் 300 கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் கலந்து கொண்டனர்.. மேலும் கோலப்போட்டி, கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் வைக்கப்பட்டு மகிழ்ச்சியாக அதில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாரத ஜனதா கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் கரு நாகராஜன் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்



▶ சென்னை காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகத்தில் கலந்தாய்வு அரங்கத்தில் டிஜிபி சங்கர் ஜிவால், காவல்துறை தலைமை இயக்குனர், படைத்தலைவர், தலைமையில் காவல்துறை உயர் அதிகாரிகள், மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தீண்டாமைக்கு எதிரான உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.



▶ திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மண்டல ஐ. ஜியாக கே.எஸ்.நரேந்திரன் நாயரை நியமித்து தமிழக அரசு உத்தரவு



▶ தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டம் வெங்கடாஜலபதி பாலிடெக்னிக் கல்லூரியில் மண்டல அளவிலான கால்பந்து போட்டி ஜன 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இப்போட்டியில் மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டிணம், காரைக்கால், புதுச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து 10 கல்லூரிகள் போட்டியில் பங்கேற்றனர். இப்போட்டியில் காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசை வென்றனர். வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை கல்லூரி முதல்வர் பிரான்சிஸ் வாழ்த்தினார். உடல் கல்வி இயக்குனர் செந்தில்வேலு மற்றும் கல்லூரி ஊழியர்கள் பாராட்டினர்.

### ரத்த பரிசோதனை மையத்தில் ரத்தத்தை கொடுத்துவிட்டு

## மூன்று செல்போன்களை திருடி சென்ற கொள்ளையன் கைது

சென்னை, பிப்,1

சென்னை புதுவண்ணாரப்பேட்டை லட்சுமி அம்மன் கோவில் பேருந்து நிலையம் அருகே உள்ள பிரபல ஒமேகா ரத்த பரிசோதனை மையம் உள்ளது.



இங்கு சுமார் 20 வயது மிக்க இளைஞர் ஒருவர் ரத்த பரிசோதனை செய்வதற்காக வந்துள்ளார். அப்போது பணியில் இருந்த பெண் ஊழியர்களிடம் தனது பிளட் குரூப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதனையடுத்து அந்த இளைஞரின் பெயர் செல்போன் நம்பரை கம்ப்யூட்டரில் பதிவு செய்த பின்னர் இதனையடுத்து அந்த இளைஞரிடம் இருந்த ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டன.

அலுவலகத்தில் உள்ள வரவேற்பு மேஜையில் வைக்கப்பட்டு இருந்த பெண் ஊழியர்களின் மூன்று செல்போன்களை நோட்டமிட்டு அந்த இளைஞன் திருடிச் சென்று தப்பிஓட்டம் பிடித்தான்.

இச்சம்பவம் குறித்து புதுவண்ணாரப்பேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து புதுவண்ணாரப்பேட்டை குற்றப்பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்து இரத்த பரிசோதனை மையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமிரா காட்சிகளை போலீசார் கைப்பற்றி ஆய்வு செய்த போது தண்டையார்பேட்டை சிவாஜி நகர் 1 வது தெருவைச் சேர்ந்த ராஜேஷ் என தெரியவந்து.

இதனையடுத்து குற்றப்பிரிவு போலீசார் ராஜேஷ் வீட்டிற்கு சென்று தேடிய போது வீட்டின் முன்பக்க கதவு பூட்டி இருந்துள்ளது வெகுநேரமாக வீட்டின் கதவு பூட்டி இருந்த நிலையில் போலீசார் சந்தேகம் அடைந்து வீட்டை தட்டி பார்த்த போது வீட்டிற்குள் பதுங்கி இருந்த ராஜேஷை போலீசார் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவனிடம் இருந்து மூன்று செல்போன்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

போலீசார் நடத்திய விசாரணையில் ராஜேஷ் மீது தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை காவல் நிலையத்தில் திருட்டு வழக்குகள் இருப்பதாகபோலீசார் விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து ராஜேஷ் மீது போலீசார் வழக்கு பதிவுசெய்து நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

### பெரியபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்

## "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் கலெக்டர் பிரபுசங்கர் ஆய்வு

ஊத்துக்கோட்டை, பிப்1-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் நேற்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர் பெரியபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தில் பள்ளிமாணவ,மாணவிகளுக்கு பரிமாறபட்ட உணவின் தரம் குறித்து சாப்பிட்டு பார்த்த ஆய்வு செய்தார்.



வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி, சத்தியமூர்த்தி, செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி ராஜவேல், ஏ.இநரசிம்மன், ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் வாசுதேவன், பள்ளியின் தலைமை ஆசிரியர் பி.ஏ.ஆறுமுகம்,ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி திருமலை மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

அப்பொழுது மாணவர்கள் பயன்படுத்தும் கழிவறை கட்டிடத்திற்கு மேற்கூரை அமைத்து தர வேண்டும் என மாணவர்களின் சார்பாக பள்ளி தலைமை ஆசிரியர் கோரிக்கை விடுத்தார்.இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் உறுதி அளித்தார்.

## கண்டெய்னர் லாரி மீது இருசக்கர வாகனம் மோதி கேபிள் டிவி ஆபரேட்டர் உயிரிழப்பு

சென்னை, பிப்,1

சென்னை திருவொற்றியூர் சரஸ்வதி நகர் 3-வது தெருவை சேர்ந்தவர் அண்ணாமலை(53) . இவர் வீச்சூர் உள்ள ஒரு தனியார் கேபிள் நிறுவனத்தில் கேபிள் டிவி ஆபரேட்டராக வேலை பார்த்து வந்தார். நேற்று முன் தினம் இரவு வேலை முடிந்து தனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்.



அப்போது மணலி விரைவு சாலையில் நின்று கொண்டிருந்த கண்டெய்னர் லாரியின் பின்புறத்தில் மோதி நிலைதடுமாறிய கீழே விழுந்த அண்ணாமலை தலை மீது பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதி விட்டு நிற்காமல் சென்றுள்ளாது.

உடனடியாக அக்கம் பக்கத்தினர் 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர் அண்ணாமலை பரிசோதித்த போது அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உறவினர்களும், பொதுமக்களும் விபத்து ஏற்பட்ட பகுதியில் மின் விளக்குகள் எரிய வில்லை எனவும், போக்குவரத்துக்கு போலீசார் சாலையில் இரண்டு வரிசையில் கணடெய்னர் லாரிகளை நிறுத்தி வைப்பதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது என்று கூறி சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து ஆய்வாளர் கோதண்டம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார் பேரில் அவர்கள்கலைந்து சென்றனர். தகவல் அறிந்து வந்த போலீசார் அண்ணாமலை உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து சாத்தாங்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## செம்பனார்கோவிலில் கண்தானம், இரத்ததானம் விழிப்புணர்வு பேரணி

தரங்கம்பாடி, பிப்.1-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவிலில் கலைமகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் செம்பனார்கோவில் கிங்ஸ் லயன்ஸ் சங்கம் சார்பில் கண்தானம், இரத்ததானம் மற்றும் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



நிகழ்ச்சியில் மாவட்ட லயன் சங்க தலைவர் சிவசுப்பிரமணியன் தலைமை வகித்தார், செம்பனார்கோவில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், லயன்ஸ் சங்க மண்டல தலைவர் மதிவாணன், வட்டார தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு கண்தானம் மற்றும் இரத்ததானம் விழிப்புணர்வு பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்து காளகஸ்திநாதபுரம் முதல் செம்பனார்கோயில் வரை பேரணியில் கலந்து கொண்டு நடைபயணம் மேற்கொண்டார். இப்பேரணியில் 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு காலகஸ்திநாதபுரம் கலைமகள் கல்லூரியில் இருந்து செம்பனார்கோவில் கலைமகள் பள்ளி வரை கண்தானம், இரத்ததானம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கைகளில் பதாகைகள் ஏந்தி பேரணியாக வந்தடைந்தனர்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் எம் அப்துல் மாலிக், அமுர்த. விஜயகுமார், காளகஸ்திநாதபுரம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சரவணன், லயன்ஸ் சங்க தலைவர் முருகானந்தம், செயலாளர் நவநீதன், பொருளாளர் ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உடை மாற்றுவதை ஸ்பை கேமரா வைத்து வீடியோ பதிவு செய்த மருத்துவர் கைது

ராயபுரம், பிப்.1-

சென்னை ராயபுரம் மாதா கோவில் தெருவை சேர்ந்த கலீல் ரகுமான் இவர் கிண்டியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார் இவரது மனைவி தஸ்லீம் இவர்களுக்கு ஒன்பது வயதில் ஒரு மகன் உள்ளார். கடந்த 10 ஆண்டுகளாக வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர்.



இந்நிலையில் நேற்று காலை தஸ்லீம் வீட்டின் படுக்கை அறையில் ஸ்பை கேமிரா இருப்பதை பார்த்துள்ளார் இது குறித்து தனது கணவர் கலீல் ரகுமானுக்கு தகவல் தெரிவித்தார். இதனை அடுத்து வீட்டிற்கு வந்த கலீல் ரகுமானுக்கு ஸ்பை கேமராவை பரிசோதனை செய்த பார்த்த பொழுது தனது மனைவி தஸ்லீம் உடை மாற்றுவதும் அதிகப்படியான வீடியோக்கள் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து கலீல் ரகுமான் ,ஸ்பை கேமராவுடன் ராயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட பொழுது வீட்டின் உரிமையாளர் அப்துல் சமத் மகன் பல் மருத்துவர் இப்ராஹிம் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். இப்ராஹிம் ராமச்சந்திரா தனியார் மருத்துவ கல்லூரியில் எம்டிஎஸ் இறுதியா ஆண்டு பயின்று வருவது விசாரணையில் தெரியவந்தது

## ஆலங்குடி அரசுப்பள்ளி தலைமை ஆசிரியர் மோசடி புகாரில் பணியிடை நீக்கம்

ஆலங்குடி, பிப்1-

நிதி மோசடி உள்ளிட்ட புகாரில் ஆலங்குடி அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள நெடுவாசலைச் சேர்ந்தவர் ஆ.கருப்பையன். ஆலங்குடி அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர். இவர், அரசு அலுவலர்களின் போலியான கையெழுத்து மூலம் வங்கிக்கடன் பெற்றுள்ளாதாகவும்,இவர் மீது மேலும் பல குற்றச்சாட்டுகள் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து கல்வித்துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில்,தலைமை ஆசிரியர் கருப்பையனை பணியிடை நீக்கம் செய்து அறந்தாங்கி மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சண்முகம் நேற்று உத்தரவிட்டார். பணியிடை நீக்க உத்தரவு நகலை கொடுக்க பள்ளிக்கூடம் சென்ற அதிகாரிகள் அங்கு தலைமை ஆசிரியர்கருப்பையன் இல்லாததால் உத்தரவு நகலை தலைமை ஆசிரியர் அலுவலகம் முன்பு ஒட்டி சென்றனர்.பணியிடை நீக்கம் செய்யப்பட்ட தலைமை ஆசிரியர் கருப்பையன் தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஸ்பெயின் நாட்டின் முன்னணி நிறுவன அதிகாரிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் சந்திப்பு



ஸ்பெயின், பிப். 1-

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறை குழுமங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் 29-ந்தேதியன்று தொழில் முதலீட்டு மாநாட்டில் கலந்துரையாடினார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஸ்பெயின் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து பேசினார்கள். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ் நாட்டில் முதலீடுகள் செய்திட வலியுறுத்தினார்.

ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ரபேல் மேத்யோ, மேனுல் மன்ஜன் வில்டா (சி.இ.ஓ, வாட்டர் டிவிஷன்) ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சியிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருவது குறித்தும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளுக்கான தனிக்கொள்கை ஒன்றையும் வகுத்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது என்றும், எனவே இத்துறைகளில் சர்வதேச அளவில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகிய ஆக்சியோனா நிறுவனத்தின் முதலீட்டிற்கு உகந்த இடமாக தமிழ்நாடு இருக்கும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

இத்துறையின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விரிவாக விளக்கினார். இந்த கலந்தாலோசனையின் முடிவில் தமிழ்நாட்டில் இத்துறைகளில் முதலீடுகள் செய்ய ஆக்சியானா நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து, பீங்கான் மற்றும் வீட்டுக் கட்டுமான பொருட்களின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி நிறுவனமாக திகழும் ரோக்கா நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் கார்லஸ் விளாகியூஸ், இந்திய இயக்குநர் நிர்மல் குமார், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, ரோக்கா நிறுவனம், தற்போது தமிழ்நாட்டில் பெருந்துறையிலும், ராணிப்பேட்டையிலும் செயல்பட்டு வரும் நிலையில், இந்தியாவில் இந்த நிறுவனத்தின் விற்பனையை மேலும் உயர்த்திடவும், சர்வதேச ஏற்றுமதிக்காகவும், இதன் விரிவாக்கத்தையும் புதிய தொழில் அலகுகளையும் தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார். தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா இத்துறையில் முதலீடு செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாட்டில் நிலவி வரும் சாதகமான சூழல் பற்றி விளக்கினார்.

இந்த கூட்டத்தின் முடிவில், ரோக்கா நிறுவனம் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்காக உறுதி அளித்துள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையை நிறுவிடவும், ராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் தற்போது செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் ரோக்கா நிறுவனம் முன் வந்துள்ளது. இதனால் 200 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

இச்சந்திப்புகளின் போது, கேய்டன்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு உடனிருந்தார். இதனை அடுத்து, வரும் நாட்களில் மேலும் பல முன்னணி நிறுவனங்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலீட்டு ஆலோசனைகளை மேற் கொள்ள உள்ளார்.

# சென்னை, மதுரை ஐஜி-க்கள் பணியிட மாற்றம் : தமிழக அரசு உத்தரவு



சென்னை : பிப். 1-

தமிழக காவல்துறை ஐஜி.,க்கள் கண்ணன், நரேந்திரன் நாயர் ஆகியோரை பணி இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழகஅரசுபிறப்பித்துள்ள உத்தரவில், வடக்கு மண்டலஐஜி.யாகஇருந்த கண்ணன் தென் மண்டல ஐ.ஜி.யாகவும், தென் மண்டலஐஜி.யாகஇருந்த நரேந்திரன் நாயர் வடக்கு மண்டல ஐ.ஜி.யாகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் இன்னும்சிலமாதங்களில் நடைபெறவுள்ள நிலையில், ஒரே இடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும்அதிகாரிகளை இடமாற்றம்செய்யக்கோரி தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. அதன்படி, தமிழக காவல்துறை அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகள், ஐபிஎஸ், ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்செய்யப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் சமீபத்தில் ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர். இதன்தொடர்ச்சியாக தற்போது ஐஜி.,க்கள் கண்ணன், நரேந்திரன் நாயர் ஆகியோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 18வது முறையாக நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவு



சென்னை : பிப். 1-

அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 18வது முறையாக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கில் 2023 ஜூன் 14ல் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக கடந்த ஆகஸ்ட் மாதம் அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இந்த வழக்கில் கடந்த 22ம் தேதி குற்றச்சாட்டுகள் பதிவு செய்ய இருந்த நிலையில், போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி செய்ததாக சென்னை மத்திய குற்றப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட 3 வழக்குகளின் விசாரணை முடியும் வரை, இந்த வழக்கின் விசாரணையை தொடங்க கூடாது என்று கோரி செந்தில் பாலாஜி தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அமலாக்கத் துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில்மனுவில், வழக்கின் விசாரணையை முடக்கி, குற்றச்சாட்டு பதிவையும், சாட்சி விசாரணையையும் தாமதப்படுத்தும் நோக்கில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதுமான எந்த காரணமும் இல்லாததால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு பதிலளிக்க செந்தில் பாலாஜி தரப்பில் அவகாசம் கோரப்பட்டதையடுத்து விசாரணையை நீதிபதி அல்லி தள்ளிவைத்தார்.

இதற்கிடையில், அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், புழல் சிறையில் இருந்து காணொலி காட்சி மூலம் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பு ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை பிப்ரவரி 7-ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார். இதன் மூலம் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் 18-வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

# சிவகங்கை தொகுதியை குறி வைக்கும் திமுகவினர் : அதிர்ச்சியில் காங்கிரஸ்



**சிவகங்கை, பிப்.1-**

**ஆறு சட்டப்பேரவைத் தொகுதிகளில் 4-ல் திமுக எம்எல்ஏக்கள் இருப்பதால் சிவகங்கை மக்களவைத் தொகுதியை இந்த முறை திமுகவுக்கு ஒதுக்க வேண்டுமென மக்களவைத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் குழுவிடம் சிவகங்கை மாவட்ட திமுக நிர்வாகிகள் வலியுறுத்தினர். இதனால் காங்கிரஸ் கட்சியினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.**

சிவகங்கை மக்களவைத் தொகுதி எம்பியாக காங்கிரஸை சேர்ந்த கார்த்தி சிதம்பரம் உள்ளார். இந்த மக்களவைத் தொகுதியில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை, மானாமதுரை (தனி), காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம், ஆலங்குடி ஆகிய 2 தொகுதிகள் உள்ளன. இதில் சிவகங்கை தொகுதியில் அதிமுக, காரைக்குடியில் காங்கிரஸ், மானாமதுரை (தனி), திருப்பத்தூர், திருமயம், ஆலங்குடி ஆகிய 4 தொகுதிகளில் திமுக வெற்றி பெற்றது. மேலும் கே.ஆர்.பெரியகருப்பன், மெய்யநாதன், ரகுபதி என 3 அமைச்சர்கள் உள்ளனர்.

ஆனால் காங்கிரஸ் ஒரு தொகுதியில் மட்டும் உள்ளது. மேலும் 2014-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் அதிமுக, திமுக, காங்கிரஸ், பாஜக என நான்கு அணிகளாக மோதின. அப்போது திமுக சார்பில் போட்டியிட்ட சுப. துரைராஜ், காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட கார்த்தி சிதம்பரத்தை விட 1.42 லட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்றார். இதனால் சிவகங்கை தொதியில் காங்கிரஸை விட திமுக வலுவாக உள்ளதாகவும், தற்போது திமுக ஆளும் கட்சியாக இருப்பதால் எளிதில் வெற்றி பெற்றுவிடலாம் என திமுகவினர் கருதுகின்றனர்.

இதனால் சிவகங்கை தொகுதியை திமுகவுக்கே ஒதுக்க வேண்டுமென குரல் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் ஜன.29-ம் தேதி சென்னையில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தங்கம்தென்னரசு, உதயநிதி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் அடங்கிய தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் இந்த முறை சிவகங்கை தொகுதியை திமுகவுக்கு ஒதுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

மேலும் கார்த்தி சிதம்பரம் எம்பி மீது சிலர் அதிருப்தியை தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இது காங்கிரஸார் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து திமுக நிர்வாகிகள் கூறுகையில் ''திமுகவுக்கு சாதகமாக உள்ள சிவகங்கை தொகுதியை பெரும்பாலும் கூட்டணி கட்சிகளுக்கே ஒதுக்கிவிடுகின்றனர். இந்த முறை திமுகவுக்கு ஒதுக்கினால் எளிதில் வெற்றி பெற்றுவிடலாம் என்று கூறியுள்ளோம். அவர்களும் பார்ப்போம் என்று கூறியுள்ளனர்'' என்றனர்.

# புதுக்கோட்டை டீம் மருத்துவமனை சார்பாக மழைக்கால மருத்துவ முகாம்



புதுக்கோட்டை , பிப்.1-

முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுதிட்டத்தின் கீழ் தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர். டாக்டர்.கே.எச். சலீம். வழிகாட்டுதலின்படி மழைக்கால மருத்துவ முகாம், புதுக்கோட்டை மாவட்டம், வைத்தூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்தில் இன்று நடைபெற்றது.

முகாமிற்கு வைத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜ் தலைமை தாங்கினார். இம்மருத்துவ முகாமில், தொற்றா நோய்களான சர்க்கரை நோய், இருதய நோய், புற்றுநோய், ஆஸ்துமா நோய் மற்றும் பல்வேறு நோய்கள்

பற்றிய விழிப்புணர்வும், நோய் கண்டறியும் பரிசோதனையும் செய்யப்பட்டன.

தொற்றும் நோய்களால் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பற்றியும், கொரோனா, டெங்கு, பன்றிக்காய்ச்சல், இன்ஃபுளுயன்சா போன்ற வைரஸ் காய்ச்சலால் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை அணுகி பரிசோதனை செய்துகொண்டு முறையாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் என்றும் தொற்று நோய்கள் பரவக்கூடிய இக்காலக்கட்டத்தில் குடிநீரை காய்ச்சி பருக வேண்டும், கை, கால்களை சுத்தமாக அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும், மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முககவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று முகாமில் அறிவுறுத்தப்பட்டது. இம்முகாமில் டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் அறிவரசு அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார்.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப், மக்கள்தொடர்பு அலுவலர் கனகா ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் திட்ட ஒருங்கிணைப்பாளர், பாண்டியராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் குடியரசு தின விழா



*தென்காசி : பிப். 1-*

*தென்காசி மாவட்டம், புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

*75-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.கண்ணன் கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார். சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த சமூகத்தை மாணவ சமுதாயத்தால் மட்டுமே உருவாக்க முடியும் என்று தனது உரையில் முதல்வர் குறிப்பிட்டார்.*

*விழாவில் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்களுக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்.*

*இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் முதல்வர், திட்ட அலுவலர்கள் முனைவர் பா.ராமராஜ், காஞ்சனா தேவி, துறைத்தலைவர்கள், மாணவ மாணவியர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.*

# தெலங்கானாவில் சாலையோரக் கடையை மூடச் சொன்ன போலீஸார் : திறக்க உதவிய முதல்வர் ரேவந்த் ரெட்டி



ஹைதராபாத் : பிப். 1-

சமூகவலைதளம் மூலம் புகழடைந்த 'குமாரி ஆண்டி'யின் சாலையோரக் கடையை மூடி வேறு இடத்துக்கு மாற்ற சொல்லிய போக்குவரத்து போலீஸாரின் உத்தரவைத் திரும்பப் பெறும்படி டிஜிபி, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்துக்கு தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாகசமூகவலைதளம் மூலம் மிகவும் பிரபலமானது குமாரி ஆண்டியின் சாலையோர உணவுக்கடை. ஹைதராபாத்திலுள்ள மாதாப்பூரின் ஐடிசி கோஹினூர் தெருவில் உள்ள குமாரி ஆண்டியின் கடைக்கு ஐடி ஊழியர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் வாடிக்கையாளர்கள். கடையின் உரிமையாளர் சாய் குமாரி சாதத்துடன் சுவைமிகு கோழிக்கறி, ஆட்டிறைச்சி என அசைவ உணவு வகைகளை வழங்குவதாக பலரும் அவரைப் பாராட்டினர். இதன் மூலமாக அவர் மிகவும் பிரபலமானார்.

இந்நிலையில் போக்குவரத்து நெரிசலைக் காரணம் காட்டி, மாதாபூரின் ராய்துராம் போக்குவரத்து போலீஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குமாரி ஆண்டியின் கடையை மூடி வேறு இடத்துக்கு மாற்றுமாறு உத்தரவிட்டனர். போக்குவரத்து நெரிசல் குறித்து பயணிகளிடமிருந்து புகார் வந்ததால் போலீஸார் கடையைமூட உத்தரவிட்டதாக போலீஸார் தெரிவித்தனர். ஆனால் அந்தப் பகுதியில் உள்ள மற்ற கடைகளை மூடச் சொல்லவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தநிலையில் போலீஸாரின் உத்தரவைத் திரும்பப் பெறும்படி மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி டிஜிபி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்துக்கும் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சாய் குமாரியின் சாலையோர உணவுக் கடையை மூடியதில் சந்திரபாபு நாயுடு மற்றும் ஜன சேனா கட்சி தலைவர் பவன் கல்யாண்-னின் பங்கு இருப்பதாக ஆந்திரப் பிரதேசத்தில் ஆளும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் அரசு குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து இந்தக் கடை மூடல் விஷயம் அரசியல் விவகாரமாக மாறியது.

முன்னதாக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி அதன் எக்ஸ் பக்கத்தில், "குமாரி ஆண்டி கடை முதலாளியான சாய் குமாரி, ஜெகன் ரெட்டி அரசால் வீடு கிடைத்தது என்று கூறியதைத் தொடர்ந்து அவரது கடையை மூடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று குற்றம்சாட்டியிருந்தது.

# "எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பில்லை" – டிடிவி தினகரன்

மதுரை : பிப். 1-

எதிர்வரும் தேர்தலில் பிரதமரை தேர்வு செய்யும் கூட்டணியில் அமமுக இடம் பெறும் அல்லது தனித்து போட்டியிடும். ஒருபோதும் இபிஎஸ் தலைமையிலான அதிமுகவுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பில்லை என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், "எதிர்வரும் தேர்தலில் பிரதமரை தேர்வு செய்யும் கூட்டணியில் அமமுக இடம் பெறும் அல்லது தனித்து போட்டியிடும். ஒருபோதும் இபிஎஸ் தலைமையிலான அதிமுகவுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பில்லை. தேர்தலில் போட்டியிட எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் நிர்வாகிகள் கோரிக்கை வைப்பதால் போட்டியிடுவது தொடர்பாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

தேர்தல் வெற்றி தோல்வியை கடந்து அரசியல் ரீதியாக நானும் ஓபிஎஸ்ஸூம் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம். பொறுத்திருந்து பாருங்கள். இது எந்த அளவுக்கு பலன் தரும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் முடிவுசெய்வார்கள். நாங்கள் சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கூட்டணி உறுதியானபிறகு அதை நாங்கள் அறிவிக்கிறோம். ஆளுநர் ரவி அவருடைய பதவிக்கு இழுக்கு வராமல் நடந்து கொள்ள வேண்டும். அதுதான் அந்த பதவிக்கும் நல்லது. அதை அவர் பின்பற்றுவார் என்று நம்புகிறோம்.

அமமுக எடப்பாடி பழனிசாமியுடன் சேர்ந்து பயணிக்க விருப்பம் இல்லை. இதுதான் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் விருப்பம். அமமுக யாருக்கும் அடிபணிந்து செல்கின்ற இயக்கம் கிடையாது. அம்மாவின் உண்மையான ஆட்சியை தமிழ்நாட்டில் அமைக்கிற வரை நானும் என்னுடன் பணியாற்றுகிறவர்களும் அதிலிருந்துபின்வாங்கமாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்டு தாக்குதல் சிஆர்பிஎஃப் வீரர்கள் மூவர் பலி – 15 பேர் காயம்



*ராய்ப்பூர் : பிப். 1-*

*சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாலை மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் சிஆர்பிஎஃப் வீரர்கள் மூவர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் கோப்ராஎனப்படும்சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்தவராவார். மேலும், இந்தத் தாக்குதலில் 15 சிஆர்பிஎஃப் வீரர்கள் காயமடைந்தனர். சத்தீஸ்கர் மாநிலத்தில் அண்மையில் பாஜக ஆட்சி அமைந்த பின்னர் நடைபெற்ற முதல் பெரிய தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.*

*சத்தீஸ்கர் மாநிலத்தில் சுக்மா - பிஜாபூர் மாவட்ட எல்லையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. சத்தீஸ்கரில் கடந்த 2021-ல் நடந்த தாக்குதலில் 23 சிஆர்பிஎஃப் வீரர்கள் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடந்த தாக்குதலும் அதே இடத்தில் நடந்துள்ளது கவனிக்கத்தது.*

*முன்னதாக, கடந்த ஜனவரி 26 ஆம் தேதி சுக்மா - பிஜாபூர் பகுதியில் முதன்முறையாக குடியரசு தின விழாவை ஒட்டி தேசியக் கொடி ஏற்றப்பட்டது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மாவோயிஸ்டு ஆதிக்கம் நிறைந்த அப்பகுதியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஜோனாகுடா - அலிகுடா பகுதியில் கோப்ரா படையினர், சிஆர்பிஎஃப் சிறப்பு அதிரடிப் படையினர் கூட்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அடர்ந்த வனப்பகுதியில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர். எந்தப் பக்கமிருந்து தாக்குதல்நடக்கிறதுஎன்று சுதாரிப்பதற்குள் மூன்று வீரர்கள் பலியாகினர். நிலைமையை உணர்ந்து பாதுகாப்புப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். ஆனால் அதற்குள் சேதம் அதிகரிக்கத் தொடங்கியது. தாக்குதல் நடத்திய மாவோயிஸ்டுகள் வனத்துக்குள் தப்பிச் சென்றுவிட்டனர். பின்னர், ஏர் ஆம்புலன்ஸ் மூலம் உயிரிழந்த மூன்று பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. அவர்கள் தேவன்.சி, பவன் குமார், லம்ப்தார் சின்ஹா என அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*முன்னதாக இம்மாத தொடக்கத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சத்தீஸ்கரில் மாவோயிஸ்டு தாக்குதல் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "அடுத்த மூன்று ஆண்டுகளில் சத்தீஸ்கரில்மாவோயிஸ்டு இடர் களையப்படும்" என்று உறுதியளித்தார். இந்நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.*

*இருப்பினும், ஜனவரியில் மட்டும் இரண்டு பெண்கள் உள்பட ஐந்து நக்சல்கள் மாநிலத்தில் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாவோயிஸ்டு - பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூட்டில் 6 மாத குழந்தை ஒன்று உயிரிழந்தது.*

# வரலாறு உலகம்

## போர்நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலின் திட்டம் குறித்து ஹமாஸ் தலைவர் பதில்



**பாலஸ்தீனம் : பிப். 1,**

**கடந்த 2023 அக்டோபர் 7 அன்று பாலஸ்தீன ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரை முற்றிலும் ஒழிக்க இஸ்ரேல் தொடங்கிய போர் தீவிரமாக 115 நாட்களை கடந்து தொடர்கிறது.**

இஸ்ரேல் ராணுவ படையினர் ஹமாஸ் மறைந்திருக்கும் பாலஸ்தீன காசா பகுதி முழுவதும் அவர்களை தேடித்தேடி வேட்டையாடி வருகின்றனர். நேற்று வரை 26,751 பேர் உயிரிழந்ததாகவும், 65,636 பேர் காயமடைந்ததாகவும் பாலஸ்தீன சுகாதார துறை அறிவித்தது. உயிரிழந்தவர்களில் பலர் பயங்கரவாதிகள் என இஸ்ரேல் ராணுவம் கூறியது.

போர் இடைநிறுத்தத்திற்கு பல உலக நாடுகள் கோரிக்கை வைத்தும் இஸ்ரேல் அவற்றை புறக்கணித்து விட்டது. அக்டோபர் 7 அன்று ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற இஸ்ரேலி பணய கைதிகளை பாதுகாப்பாக மீட்டு, ஹமாஸ் அமைப்பினரயும் சரணடைய செய்யும் வரை போர் நிறுத்தம் குறித்த பேச்சுக்கே இடமில்லை என இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது.

ஹமாஸ் அமைப்பினரின் வசம் 136 பணய கைதிகள் இன்னும் உள்ளதாக கூறும் இஸ்ரேல், காசா முழுவதும் அவர்களை தேடி வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஒர் இடைக்கால போர்நிறுத்த திட்டத்தை முன்வைத்துள்ளது.

இதனை செயல்படுத்த பேச்சுவார்த்தைக்கு வருமாறு அந்நாடுகளின் தலைவர்கள் ஹமாஸ் அமைப்பினருக்கு அழைப்பு விடுத்தனர். இது குறித்து ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்ததாவது: அமைதிக்காக இஸ்ரேல் முன்மொழிந்துள்ள ஒரு திட்டம் குறித்த பேச்சுவார்த்தைக்கு எகிப்து தலைநகர் கெய்ரோவிற்கு வர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். செயல்படுத்த கூடிய எந்த திட்டத்திற்கும் நாங்கள் தயார். இஸ்ரேல் வழங்கியுள்ள இத்திட்டத்தின்படி 6-வார போர்நிறுத்தத்திற்கு இஸ்ரேல் சம்மதிக்கிறது.

இந்த இடைப்பட்ட காலத்தில் இஸ்ரேலிய பணய கைதிகளை ஹமாஸ் அமைப்பினரும், ஹமாஸ் கைதிகளை இஸ்ரேலும், பரஸ்பரம் விடுவிக்க வேண்டும். நிரந்தர போர்நிறுத்தத்திற்கு நாங்கள் கோரிக்கை வைத்தோம்; ஆனால், அதனை இஸ்ரேல் புறக்கணித்து விட்டது என்று ஹனியே கூறினார். கடந்த 2023 நவம்பர் இறுதியில் ஒரு-வார கால போர் நிறுத்தத்தில் சுமார் 105 பணய கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்ததும், இஸ்ரேலிய சிறைகளில் இருந்த 240 பயங்கரவாத குற்றவாளிகளை இஸ்ரேல் விடுவித்ததும் குறிப்பிடத்தக்கது.

## மெக்சிகோவில் பேருந்தும் டிரக்கும் நேருக்கு நேர் மோதல் : 19 பேர் உயிரிழப்பு



**மெக்சிகோ : பிப். 1,**

**நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வட அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ நாட்டின் ஜலிஸ்கோ மாநிலத்தில் உள்ள குவாடலஜாரா பகுதியில் இருந்து சினலோவா மாநில லாஸ் மாசிஸ் பகுதிக்கு சுமார் 50 பயணிகளை ஏற்றி கொண்டு ஒரு இரட்டை அடுக்கு பேருந்து சென்று கொண்டிருந்தது.**

அப்பேருந்து வடமேற்கு மெக்சிகோவில் எலோடா முனிசிபாலிட்டி பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வேகமாக வந்த ஒரு டிரக்கின் மீது நேருக்கு நேராக மோதியது. இதில் அந்த பேருந்து அங்கேயே தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்; 22 பேர் காயமடைந்தனர்.

எரிந்த நிலையில் உள்ள சடலங்களை பணியாளர்கள் அப்புறப்படுத்தி அடையாளம் காணும் பணியை செய்து வருகின்றனர். இதை தொடர்ந்து அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. அதிக வேகம், மோசமான வாகனங்கள், ஓட்டுனரின் அலட்சியம் மற்றும் பயண களைப்பு போன்ற பல்வேறு காரணங்களால் மெக்சிகோவின் தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட பல சாலைகளில் அடிக்கடி பேருந்து விபத்துகள் நடப்பது குறிப்பிடத்தக்கது.

## வாரத்தில் இனி 4 நாட்கள் மட்டுமே வேலை

### இன்று முதல் சோதனை முயற்சியாக அறிமுகப்படுத்த ஜெர்மனி திட்டம்



**பெர்லின் : பிப். 1,**

**உலகில் பல வளர்ந்த நாடுகள் குறைவான வேலை நேரத்தைக் கடைபிடிக்கின்றன.**

ஜெர்மனி பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள புதிய சோதனை முயற்சியை மேற்கொள்ளவிருக்கிறது. உலகில் வளர்ந்த நாடுகளான டென்மார்க், நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், ஸ்பெயின், இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் குறைவான வேலை நேரத்தைக் கடைபிடித்து வருகின்றன. இந்த நிலையில் ஜெர்மனியும் குறைவான வேலை நேரத்தைக் கடைபிடிக்க உள்ளது.

அதன்படி இன்று முதல், வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை என்ற திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர உள்ளது. மீதமுள்ள 3 நாட்கள் விடுமுறை தானாம். இதனை கடைபிடிப்பதன் மூலம் பணியாளர்களின் உடல் மற்றும் மனநிலை ஆரோக்கியமடைவதோடு அவர்களது செயல்திறனும் அதிகரிக்கும் என ஜெர்மனி அரசு எதிர்பார்க்கிறது.

இந்த திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என அந்நாட்டில் உள்ள பல தொழிலாளர் சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தன. இந்த நிலையில் அமலுக்கு வரவிருக்கும் இந்த சோதனை நல்ல பலனை அளிக்கும் என தொழிற்சங்கங்களும் அரசும் எதிர்பார்க்கின்றன. இதில் ஜெர்மனியின் 45 நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இந்த சோதனை அடுத்த 6 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் ஜெர்மனியில் நிலவும் குறைந்த பணியாளர்கள் பிரச்சினையும் தீர்வுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்ஜியத்தில் வாரத்திற்கு நான்கு நாட்கள் மட்டுமே மக்கள் வேலை செய்கிறார்கள். அதாவது, வாரத்தில் 40 மணிநேரம் வேலை. நெதர்லாந்தில் வாரத்திற்கு 29 மணிநேரம் மட்டுமே மக்கள் வேலை செய்கிறார்கள். வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே அவர்களுக்கு வேலை. இந்த நடைமுறைகள் நல்ல பலன்களை அளிப்பதாக அந்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

## மலேசியாவின் புதிய மன்னராக

### சுல்தான் இப்ராகிம் பதவியேற்பு



**கோலாலம்பூர் : பிப். 1,**

**கோலாலம்பூரில் உள்ள தேசிய அரண்மனையில் புதிய மன்னரின் பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.**

மலேசியாவின் 17-வது மன்னராக சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் பதவியேற்றார். கோலாலம்பூரில் உள்ள தேசிய அரண்மனையில் அவரது பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழா தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மலேசியாவின் பிற தலைவர்கள் முன்னிலையில், சுல்தான் இப்ராகிம் உறுதிமொழி எடுத்துக்கொண்டு, பதவி பிரமாணப் பத்திரங்களில் கையெழுத்திட்டார். அதே சமயம் நாட்டின் துணை தலைவராக பேராக் மாகாணத்தின் ஆட்சியாளரான சுல்தான் நஸ்ரின் ஷா, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவியேற்பு விழாவில் மலேசியாவின் பிரதமர் அன்வார் இப்ராகிம் மற்றும் மந்திரிசபை உறுப்பினர்கள் பங்கேற்றனர். முன்னதாக மலேசியாவின் முன்னாள் மன்னரான பகாங் ஆட்சியாளர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹ்மத் ஷாவின் பதவிக்காலம் நேற்று நிறைவு பெற்றதைத் தொடர்ந்து இன்று புதிய மன்னர் பதவியேற்றுள்ளார்.

மலேசியா ஒரு அரசியலமைப்பு முடியாட்சியாகும். அங்குள்ள ஒன்பது சுல்தான்கள் அல்லது ஆட்சியாளர்கள், தங்கள் மாகாணங்களின் தலைவர்களாகவும், மதத் தலைவர்களாகவும் செயல்படுகின்றனர். இவர்கள் சுழற்சி முறையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மன்னராக பதவியேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான், மனைவிக்கு தலா 14 ஆண்டுகள் சிறை



**லாகூர் : பிப். 1,**

**அரசின் ரகசியங்களை கசிய விட்டதாக இம்ரான்கானுக்கு ஏற்கனவே 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான். பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சப் கட்சி தலைவரான இவர், 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். அந்த காலத்தில் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்களிடமிருந்து பெற்ற பரிசுகளை அரசிடம் ஒப்படைக்காமல் விற்று சொத்து சேர்த்து ஊழலில் ஈடுபட்டதாக இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபி மீது குற்றச்சாட்டு எழுந்தது. பரிசுப்பொருட்களை அரசு கருவூலமான தோஷகானா என்ற துறையில் ஒப்படைக்காமல் ஊழலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

அதேபோல், அரசின் ரகசியங்களை கசியவிட்டதாகவும், பிரதமர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வன்முறையை தூண்டியதாகவும் இம்ரான்கான் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில், இம்ரான்கான் கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனிடையே, பிரதமராக இருந்தபோது அரசின் ரகசியங்களை கசியவிட்டதாக பதியப்பட்ட வழக்கில் இம்ரான்கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கோர்ட்டு உத்தரவிட்டது.

இந்நிலையில், இம்ரான்கான் மற்றும் அவரது மனைவிக்கு எதிரான தோஷகானா பரிசுப்பொருள் ஊழல் வழக்கு கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கில் இம்ரான்கானும் அவரது மனைவி புஷ்ரா பிபியும் குற்றவாளிகள் என கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும், குற்றவாளிகள் இருவருக்கும் தலா 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

தண்டனை விதிக்கப்பட்ட இம்ரான்கான் அவரது மனைவி, 10 ஆண்டுகளுக்கு அரசு பதவிகள் வகிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும், இருவருக்கும் 787 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த வழக்கு தொடர்பாக இம்ரான்கானின் மனைவி புஷ்ரா பிபி நேற்று கோர்ட்டில் ஆஜராகவில்லை.

அரசு ரகசியங்களை கசியவிட்டதாக இம்ரான்கான் ஏற்கனவே 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ளார். தற்போது பரிசுப்பொருள் ஊழல் வழக்கில் மேலும் 14 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் வரும் 8ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இரு வழக்குகளில் இம்ரான்கானுக்கு மொத்தம் 24 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தானில் இம்ரான் கான் கட்சி பேரணியில் குண்டுவெடிப்பு – 4 பேர் பலி



**கராச்சி : பிப். 1,**

**பாகிஸ்தானில் பிப்ரவரி 8-ந்தேதி பொது தேர்தல் நடைபெற உள்ள சூழலில் இந்த குண்டுவெடிப்பு நடந்துள்ளது.**

பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் மாகாணத்தில் குவெட்டா நகரில், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் சிலர் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பேரணி ஒன்றை நடத்தினர். அக்கட்சியின் கொடியை ஏந்தியபடி, பைக்குகளில் அவர்கள் ஊர்வலம் சென்றனர். அப்போது, யாரும் எதிர்பாராத வகையில், திடீரென குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த சம்பவத்தில், அக்கட்சியை சேர்ந்த தொண்டர்கள் 3 பேர் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். இதனை அக்கட்சிக்கான மாகாண பொது செயலாளர் சலார் கான் காக்கர் உறுதிப்படுத்தி உள்ளார். இந்த சம்பவத்திற்கு நாங்கள் கடுமையான கண்டனம் தெரிவிக்கிறோம். கட்சி தொண்டர்களுக்கு பதிலாக பயங்கரவாதிகளை ஒடுக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் என அவர் கூறியுள்ளார்.

எனினும், காயமடைந்த நபர்களில் சிலரின் நிலை கவலைக்குரிய வகையில் உள்ளது. அதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சில மணிநேரங்களில் இந்த பேரணி நடைபெற்றது.

குண்டுவெடிப்பு சம்பவம் பற்றிய வீடியோ ஒன்றும் வெளிவந்துள்ளது. ஒரு பலத்த சத்தம் கேட்டதும் கட்சியினர் அலறும் காட்சிகள் அதில் இடம் பெற்றுள்ளன. அந்நாட்டில் பிப்ரவரி 8-ந்தேதி பொது தேர்தல் நடைபெற உள்ள சூழலில் இந்த குண்டுவெடிப்பு நடந்துள்ளது.

## தைவானை சுற்றி வலம் வந்த சீனாவின் விமானம், கடற்படை கப்பல்கள்



**தைப்பே : பிப். 1,**

**நடப்பு ஜனவரிவரையில், சீனாவின் 291 ராணுவ விமானங்கள் மற்றும் 132 கடற்படை கப்பல்களை தைவான் கண்டறிந்து உள்ளது.**

தைவான் நாட்டை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கத்துடன் சீனா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதன்படி, கடந்த 2020-ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து தைவானை சுற்றி ராணுவ விமானம் மற்றும் கடற்படை கப்பல்களை அனுப்பி வருகிறது. இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை காலை 6 மணி முதல், செவ்வாய் கிழமை காலை 6 மணி வரையில், தைவானை சுற்றி 9 ராணுவ விமானம் மற்றும் 4 கடற்படையை சேர்ந்த கப்பல்கள் ஆகியவற்றை சீனா அனுப்பியிருக்கிறது. இதனை தைவான் பாதுகாப்பு அமைச்சகம் கண்டறிந்து உள்ளது. இதேபோன்று, தைவானில் கீலங் பகுதியில் இருந்து வடமேற்கே 139 கி.மீ. தொலைவில் தைவான் ஜலசந்தியை சீன பலூன் ஒன்று மாலை 3.09 மணியளவில் கடந்து சென்றுள்ளது. எனினும், 3.10 மணியளவில் அது மறைந்து விட்டது என தைவான் நியூஸ் செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. இது தைவானை அதிர்ச்சி அடைய செய்தது.

சீனாவின் இந்த செயலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், தைவானும் விமானம் மற்றும் கடற்படையை சேர்ந்த கப்பல்களை அனுப்பியதுடன், சீன விமான செயல்பாட்டை கண்காணிக்க விமான பாதுகாப்பு சாதனங்களையும் அனுப்பியுள்ளது. அப்போது, சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத்தின் எந்த விமானமும் அந்த பகுதியை கடந்து செல்லவில்லை. நடப்பு ஜனவரி வரையில், சீனாவின் 291 ராணுவ விமானங்கள் மற்றும் 132 கடற்படை கப்பல்களை தைவான் கண்டறிந்து உள்ளது.

## கனடாவில் இந்திய வம்சாவளி இளைஞர் சுட்டு கொலை : இந்தியர் கைது

**ஒட்டாவா : பிப். 1,**

**கனடா போலீசார் விசாரணை மேற்கொண்டு, பிராம்ப்டன் நகரை சேர்ந்த பிரீத்பால் சிங் (வயது 18) என்பவரை கைது செய்தனர்.**



கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் பிராம்ப்டன் நகரை சேர்ந்தவர் நிஷான் திந்த் (வயது 18). இவர் கடந்த ஆண்டு டிசம்பர் 19-ந்தேதி உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார். இதுபற்றி போலீசார் நடத்திய விசாரணையில், அவரை மற்றொரு இளைஞர் துப்பாக்கியால் சுட்டது தெரிய வந்தது. இதுபற்றிய தகவல் அல்லது வீடியோ காட்சிகள் எதுவும் உள்ளனவா? என விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொல்லப்பட்ட இளைஞர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் என கூறப்படுகிறது. அவரை சுட்டு கொன்றவரும் இந்தியா வம்சாவளி இளைஞர் என தெரிய வந்துள்ளது. அடையாளம் தெரியாத இடத்தில் வைத்து நிஷானை சுட்டு விட்டு, பின்னர் மருத்துவமனை அருகே விட்டுவிட்டு சென்றது தெரிய வந்துள்ளது.

இதுபற்றி கனடா போலீசார் விசாரணை மேற்கொண்டு, பிராம்ப்டன் நகரை சேர்ந்த பிரீத்பால் சிங் (வயது 18) என்பவரை கைது செய்தனர். இதன்பின் அவர் காவலுக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர், ஒன்டாரியோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். தொடர்ந்து விசாரணைக்கு வலு சேர்க்கும் வகையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## பள்ளி மைதானத்தில் விளையாடிய மகனை கடத்திய தந்தை




**அமெரிக்கா : பிப். 1,**

**அமெரிக்காவின் மத்தியமேற்கு பகுதியில் உள்ள மாநிலம் அயோவா. இதன் தலைநகரம் டெஸ் மாயின்ஸ்.**

அயோவாவின் க்ரீன் கவுன்டி பிராந்தியத்தில் உள்ள நகரம் ஜெஃபெர்சன். இங்குள்ள க்ரீன் கவுன்டி ஆரம்ப பள்ளியில் படித்து வந்தவர், ஆசிய வம்சாவளி சிறுவனான, 7 வயது ப்ரைசன் டுவாங். நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மதியம், ப்ரைசனின் தந்தை ப்ராண்டன் டுவாங் (34), சுமார் 12:40 மணியளவில், பள்ளிக்கு வந்து அங்கு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த ப்ரைசன் டுவாங்கை பள்ளியிலிருந்து வீட்டிற்கு அழைத்து செல்வதாக பள்ளி நிர்வாகத்திடம் கூறினார். அவர்கள் மறுக்கவே, வாக்குவாதம் செய்து ப்ராண்டன் மகனை அழைத்து சென்றார். அவர்கள் இருவரும் டொயோட்டா டகோமா காரில் சென்றனர்.

இதையடுத்து காவல்துறையினருக்கு பள்ளி நிர்வாகம் தகவல் தெரிவித்தது. இருவரும் வீடு திரும்பவில்லை. இதை தொடர்ந்து "ஆம்பர் அலர்ட்" எனும் எச்சரிக்கை வெளியிட்ட காவல்துறையினர், காணாமல் போன இருவரை குறித்தும் பொதுவெளியில் விவரங்களை வெளியிட்டு, பொதுமக்களுக்கு ஏதேனும் தகவல் தெரிந்தால் காவல்துறையினருக்கு உடனே தெரிவிக்குமாறு கோரினர்.

நீண்ட தேடுதலுக்கு பிறகு அவர்கள் சென்ற வாகனத்தை கண்ட காவல்துறையினர், அதனை நிறுத்த முயன்றனர். அவர்களிடமிருந்து தப்பிக்க முயன்று வாகனத்தை மோதி விபத்துக்குள்ளாக்கிய ப்ராண்டன், சிறுவனை தூக்கி கொண்டு கையில் ஒரு துப்பாக்கியுடன் ஓடினார். ப்ராண்டனுடன் பேச்சுவார்த்த நடத்திய காவல்துறையினர், சிறுவனை மீட்டு, ப்ராண்டனை கைது செய்தனர். அவர் மீது ஆள்கடத்தல் வழக்கு பதிவு செய்த காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பெண்களின் கருக்கலைப்பு உரிமை மசோதா நிறைவேற்றம்



**பாரீஸ் : பிப். 1,**

**பெண்களின் கருக்கலைப்பு உரிமை தொடர்பான மசோதா பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.**

அமெரிக்காவில் பெண்களின் கருக்கலைப்பு உரிமைகளை ரத்து செய்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. இதற்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பின. அப்போது பிரான்சில் பெண்களின் கருக்கலைப்பு உரிமைகள் நிலைநாட்டப்படும் என அதிபர் இம்மானுவேல் மேக்ரான் உறுதி அளித்தார்.

அதன்படி பெண்களின் கருக்கலைப்பு உரிமை தொடர்பான மசோதா பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் நிறைவேறியது. இதன்பிறகு இந்த மசோதா செனட் சபைக்கு அனுப்பப்படும். அங்கு பெரும்பான்மை பெற்றால் இது சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2024 மக்களவை தேர்தலுக்கு பின் எனது அரசு முழு பட்ஜெட்டை தாக்கல் செய்யும்

## நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி பேட்டி



புதுடெல்லி, பிப். 1-

“2024 மக்களவை தேர்தலுக்கு பின் எனது அரசு முழு பட்ஜெட்டை தாக்கல் செய்யும். மக்களின் ஆசியுடன் இந்தப் பயணம் தொடரும்.” என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையுடன் தொடங்கியது. பிப்ரவரி 9-ம் தேதி முடிவடைய உள்ள இந்த கூட்டத்தொடரில், இன்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

தொடர்ந்து குடியரசுத் தலைவர் உரை, இடைக்கால பட்ஜெட் தாக்கல் மீதான விவாதம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியின் பதிலுடன் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஆகியவையே இந்த சுருக்கமான அமர்வின் முக்கிய நிகழ்ச்சியாக அமையும். தற்போதைய அரசின் கடைசி கூட்டத்தொடர் என்பதால் இந்த அமர்வு எதிர்பார்ப்புக்குரியதாக மாறியுள்ளது.

இதனிடையே, கூட்டத்தொடர் தொடங்குவதற்கு டெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, “இந்தப் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் கூடிய முதல் அமர்வில் நாரி சக்தி வந்தான் ஆதினியம் (மகளிர் இடஒதுக்கீடு மசோதா) நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு, மகளிர் சக்தியின் திறன், வீரம், வலிமை ஆகியவற்றை நாடு எவ்வாறு அனுபவித்தது என்பதை குடியரசு தின விழா அணிவகுப்பில் கண்டோம். குடியரசு தின விழா அணிவகுப்பில் பெண் வலிமை பறைசாற்றப்பட்டுள்ளது.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது மகத்தான சாதனை. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழிகாட்டுதலில் நேற்று, பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியது. நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்யவிருக்கிறார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம். எனவே, எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபடுவோரை வரலாறு நினைவில் வைத்திருக்காது. இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் மனந்திரும்புவதற்கும் நேர்மறையான தடம் பதிப்பதற்கும் ஒரு வாய்ப்பாகும். இந்த வாய்ப்பை தவறவிட வேண்டாம் என்று அனைத்து எம்பிக்களையும் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் சிறந்ததைச் செய்ய வேண்டும். 2024 மக்களவை தேர்தலுக்கு பின் எனது அரசு முழு பட்ஜெட்டை தாக்கல் செய்யும்.

ஒவ்வொரு நாளும் நமது நாடு முன்னேற்றத்தின் புதிய உச்சங்களைத் தாண்டி வருகிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி நடைபெறுகிறது. மக்களின் ஆசியுடன் இந்த பயணம் தொடரும்” என்று தெரிவித்தார்.

# பொன்னமராவதி வட்டத்தில் முதலமைச்சரின் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ், பல்வேறு அரசுத் துறைகளின் பணிகளை கலெக்டர் மெர்சி ரம்யா ஆய்வு



பொன்னமராவதி,பிப்.1-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின்‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ், பல்வேறு அரசுத் துறைகளின் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று (31.01.2024) நேரில்பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் அனைத்து நலத் திட்டங்களும்,சேவைகளும் தங்குதடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில், ’உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ என்ற புதிய திட்டத்தை கடந்த 23.11.2023 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, இத்திட்டம்இன்றையதினம் நடைமுறைக்குவந்துள்ளது.

அந்தவகையில், இன்றையதினம் பொன்னமராவதி வட்ட பகுதிகளில் ’உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டத்தின்கீழ் பல்வேறு அரசுத் துறைகளின் பணிகள் பார்வையிடப்பட்டது. அதன்படி, ஆலவயல் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் கல்வித் தரம், குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு வகைகள், மேம்படுத்தப்பட்ட பள்ளி வகுப்பறையில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கற்றல், கற்பித்தல் திறன்கள், மதிய உணவுத்திட்டத்தின்மூலம் சுகாதாரமான முறையில் உணவு வழங்கப்படுவது, முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ் உணவு அட்டவணையின்படி சரியான நேரத்திற்குள் காலை உணவு வழங்கப்படுவது, இருப்பு பதிவேடுஉள்ளிட்டவைகள் நேரில்பார்வையிட்டுஆய்வு செய்யப்பட்டது.

மேலும்ஆலவயல்கிராம நிர்வாக அலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்தும், ஆலவயல் கால்நடை மருந்தகத்தில், மாடுகள் செயற்கை கருவூட்டல் முறையில் சினைப்படுத்துவது குறித்தும், ஆலவயல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலைக் கடையில் விநியோகம் செய்யப்படும் குடிமைப் பொருட்களின் இருப்பு, தரம் குறித்தும், ஆலவயல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கஅலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்தும் நேரில்பார;வையிட்டுஆய்வு செய்து, டாம்கோ கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் லெப்பை மகளிர; சுயஉதவிக்குழுவிற்கு ரூ.8.46 இலட்சம் மதிப்பில் கடனுதவித் தொகைகள் வழங்கப்பட்டது.

மேலும்,அம்மன்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் மருந்துப் பொருட்களின் இருப்பு பதிவேடுகளை ஆய்வுசெய்து,பிரசவத்திற்கு பின் கவனிப்பு அறைக்கு சென்று தாய்மார்களிடம் தங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து, தாய்மார்களுக்கு குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்கப்பட்டது. அம்மன்குறிச்சி ஊர்புற நூலகத்தில் புத்தகங்களின் இருப்புகள், வாசகர்களின் வருகைகள், அடிப்படை வசதிகள் உள்ளிட்டவைகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.


உலகம்பட்டி முதல் கண்டியாநத்தம் வரை புதுப்பட்டி வழியாக செல்லும் சாலை முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.82.05 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி மற்றும் கண்டியாநத்தம் முதல் கருமங்காடுவரைசெல்லும் ஒரடுக்கு மெட்டல் சாலை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.27.22 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிநேரில்பார;வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளை விரைவாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேலசிவபுரி கணேசர் அறிவியல் கல்லூரியில், புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ள கல்லூரி மாணவிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில், அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது பொதுமக்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள், சேவைகள் உள்ளிட்டவைகள் விரைவாக சென்றுசேர்வதை உறுதி செய்திட தொர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பேருந்துநிலையத்தில் அடிப்படை வசதிகள், பொதுமக்களுக்கான பேருந்து தகவல் பலகைகள் உள்ளிட்டவைகள் குறித்தும் மற்றும் வலையப்பட்டி அரசு மருத்துவமனையில் மருந்துகளின் இருப்பு பதிவேடுகள்,மருத்துவர்கள், செவிலியர்களின் வருகை பதிவேடுகள், அடிப்படை வசதிகள், நோயாளிகள் தங்கும் இடம் உள்ளிட்டவைகள் குறித்தும் நேரில்பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் சரவணன் (நெடுஞ்சாலை நிலமெடுப்பு), ரம்யாதேவி (காவிரி - வைகை - குண்டாறு), இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, மாவட்ட இயக்கமேலாண்மைஅலகு திட்ட இயக்குநர் ரேவதி மற்றும்அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# கறம்பக்குடி அருகே அரசு பள்ளி மாணவனை தாக்கியவர்களை கைது செய்ய கோரி சாலை மறியல் போராட்டம்



கறம்பக்குடி, பிப் 1-

கறம்பக்குடி அருகே மழையூர் அரசு பள்ளி மாணவனை தாக்கியவர்களை கைது செய்யக்கோரி மாணவனின் உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.மாணவனைதாக்கிய 6பேர் மீதுவன்கொடுமைதடுப்பு சட்டம் வழக்கு பதிவு செய்த காவல்துறையினர் ஒருவரை கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, தீத்தானிப்பட்டியை சேர்ந்தவர் நடராஜன் மகன் பாலமுருகன் (17). இவர் மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து வருகிறார். மாணவன் பாலமுருகன்பட்டியல்இனத்தை சேர்ந்தவர். பாலமுருகன் தரப்பினருக்கும் துவாரை அடுத்த கொங்கராகோட்டையை சேர்ந்த மாற்று சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் கடந்த சில வாரங்களாக பிரச்சனை இருந்து வந்தது.

இந்நிலையில் திங்கள்கிழமை மாலை பள்ளி முடிந்துமாணவன்பாலமுருகன் தனதுஊரான தீத்தானிப்பட்டிக்கு பேருந்தில்செல்வதற்கு பேருந்து நிழற்குடையில் காத்திருந்தார். அப்பொழுது அங்கு வந்த 6 பேர் கொண்ட கும்பல் மாணவன் பாலமுருகனை இருசக்கர வாகனத்தில் தூக்கி வைத்து வேகமாக சென்றனர். அப்போது மாணவன் பாலமுருகன் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துள்ளார். உடனே அந்த கும்பல் மாணவன் பாலமுருகனை பலமாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டனர். அங்கு இருந்தவர்கள் மாணவன் பாலமுருகனை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். அங்கு பாலமுருகனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயம் அடைந்த பாலமுருகனின் உறவினர்கள் தாக்கியவர்களை கைது செய்யக்கோரி தீத்தானிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நேற்று காலை திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் புதுக்கோட்டை கரம்பக்குடி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

காலை நேரம் என்பதால் பள்ளி, கல்லூரி, வேலைக்கு செல்வோர் பாதிப்படைந்தனர். இது குறித்து சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் புதுக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் செல்வம் மற்றும் காவல் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் பாலமுருகனை தாக்கிய 6 பேர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தனர். அதில் ஆண்டிகுளப்பெண்பட்டியை சேர்ந்த சசி, கதிர்,கொங்கராகோட்டையை சேர்ந்த சிவா உள்ளிட்ட 6 பேர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டம் பதியப்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்தனர். மேலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டவர்களில் சிவா என்பவரை கைது செய்து உள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர். இதனை ஏற்று சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சாலை மறியல் போராட்டத்தினால் புதுக்கோட்டை கறம்பக்குடி சாலையில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# ஜனவரி 29 "இந்திய பத்திரிக்கைகள் தினம் அனுசரிப்பு



புதுக்கோட்டை , பிப். 1-

"1780 , ஜனவரி 29 அன்று ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்ற ஆங்கிலேயர் Bengal Gazette or Calcutta General Advertiser என்ற ஆங்கில வாரப் பத்திரிக்கையை வெளியிட்டார். இது தான் இந்தியாவின் முதல் பத்திரிக்கை. கொள்கைப் பிடிப்போடு, அச்சமின்றி எழுதியதற்காக இந்தியாவில் முதன் முதலில் சிறை சென்ற வரும் அவரே.

இந்த தினத்தில், அதிகாலையில் இல்லந்தோறும், நாள் நேரம் பாராமல் செய்தித்தாள்களை விநியோகம் செய்யும் நபர்களையும்,முகவர்களையும் அவர்கள் செய்தித்தாள் எடுக்கும் இடத்திற்கே சென்று வாழ்த்தி, இனிப்பு வழங்கி கௌரவம் செய்யும் நிகழ்வை, புதுக்கோட்டை வாசகர் பேரவை மற்றும் மரம் நண்பர்கள், நான்காவது ஆண்டாக செய்து வருகிறார்கள். அந்த நிகழ்வு இன்றும் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மூப்பது ஆண்டுகளுக்கு மேலாக செய்தித்தாள் விநியோகம் செய்யும் செல்வம் உட்பட 25 நபர்கள் மற்றும் முகவர்களுக்கு சால்வை அணிவித்து இனிப்புகள் வழங்கி கௌரவம் செய்யப்பட்டது.

வாசகர் பேரவை செயலர் சா.விஸ்வநாதன், மரம் நண்பர்கள் செயலர் ப.ராதாகிருஷ்ணன் என்கிற கண்ணன், உறுப்பினர் பொறியா ளர் வி.இறையன்பு ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



▸ தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சுப்பிரமணியபுரத்தில் அமைந்துள்ள வியாச கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரியில் இந்திய தேசத்தின் 75- வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரி முதல்வர் ஈஸ்வரன் தலைமையேற்று தேசிய கொடியை ஏற்றினார். விழாவில் கலந்து கொண்ட கல்லூரி மாணவிகளுக்கும், பணியாளர்களுக்கும் இனிப்பு வழங்கி சிறப்பித்தனர்.



▸ தென்காசி மாவட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பை தொடர்ந்து, நேற்று தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” என்ற முகாமில் அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி விரைந்து மக்களை சென்றடைவதை உறுதிசெய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டத்தில் ராயகிரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியினை ஆய்வு மேற்கொண்டு 5 மகளிர் சுய உதவி குழுவினருக்கு ரூ.32.75 லட்சம் கடன் உதவித்தொகைக்கான காசோலையினை வழங்கினார்.




PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# யு–19 உலக கோப்பை சூப்பர் 6 முஷீர் கான் சதத்தால் இந்தியா அபார வெற்றி



**புளோயம்போன்டீன் : பிப். 1,**

**ஐசிசி யு-19 உலக கோப்பை தொடரின் சூப்பர் 6 முதல் பிரிவு ஆட்டத்தில், நியூசிலாந்து யு-19 அணியுடன் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மோதிய இந்தியா யு-19 அணி 214 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.**

மங்காவுங் ஓவல் மைதானத்தில் நடந்த இப்போட்டியில், டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீசியது. இந்தியா யு-19 அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 295 ரன் குவித்தது. முஷீர் கான் 131 ரன் (126 பந்து, 13 பவுண்டரி, 3 சிக்சர்), ஆதர்ஷ் சிங் 52, கேப்டன் உதய் சாஹரன் 34 ரன் விளாசினர்.

முஷீர் கான், இந்திய டெஸ்ட் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள சர்பராஸ் கானின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து களமிறங்கிய நியூசி. யு-19 அணி 28.1 ஓவரில் வெறும் 81 ரன் மட்டுமே எடுத்து ஆல் அவுட்டானது. 214 ரன் வித்தியாசத்தில் ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்த இந்தியா யு-19 அணி சூப்பர் 6 முதல் பிரிவில் 6 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது. தொடர்ச்சியாக 2வது சதத்தை விளாசி அசத்திய முஷீர் கான் ஆட்ட நாயகன் விருது பெற்றார். இவர் பந்துவீச்சிலும் சிறப்பாக செயல்பட்டு 3.1 ஓவரில் 10 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட் கைப்பற்றி ஆல்-ரவுண்டராக ஜொலித்தார்.

# வரலாற்றில் முதல் முறையாக கேலோ இந்தியா போட்டியில் தமிழ்நாடு அணி 2ம் இடம் : 97 பதக்கங்கள் குவித்து சாதனை

**சென்னை : பிப். 1,**

**வரலாற்றில் முதல் முறையாக கேலோ இந்தியா போட்டியில் தமிழ்நாடு அணி பதக்க பட்டியலில் 2-ம் இடம் பிடித்துள்ளது.**

தமிழகத்தில் 6வது 'விளையாடு(கேலோ) இந்தியா இளையோர் போட்டி' கடந்த 19ம் தேதி தொடங்கியது. நேரு ஸ்டேடியத்தில் கேலோ இந்தியா போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் போட்டிகள் நடந்துன. இதில் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 18 வயதுக்கு உட்பட்ட 5,500 வீரர் வீராங்கனைகள் பங்கேற்றனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற போட்டிகளில் மகளிருக்கான 81 கிலோ எடைப்பிரிவில் தமிழகத்தின் ஆர்.பி.கீர்த்தனா 188 கிலோ (ஸ்னாட்ச் 85+கிளீன் & ஜெர்க் 103) எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு தமிழக வீராங்கனையான கே.ஓவியா 184 கிலோ (ஸ்னாட்ச் 78+ கிளீன் & ஜெர்க் 106) வெள்ளிப் பதக்கமும் வென்றனர். உத்தரபிரதேசத்தின் சந்துஷ்டி சவுத்ரி 162 கிலோ (ஸ்னாட்ச் 76+ கிளீன் & ஜெர்க் 86) எடையை தூக்கி வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு டென்னிஸ் இறுதிப்போட்டியில் தமிழகத்தின் பிரனவ், மகாலிங்கம் ஜோடி 6-3 6-1 என்ற நேர் செட் கணக்கில் மகாராஷ்டிராவின் தனிஷ்க் முகேஷ் ஜாதவ், காஹிர் சமீர் வாரிக் ஜோடியை வீழ்த்தி தங்கப் பதக்கம் - வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவிலும் தமிழகம் தங்கப் பதக்கம் வென்றது. தமிழகத்தின் மாயா ராஜசேகர் ரேவதி, லட்சுமி பிரபா ஜோடி இறுதிப் போட்டியில் 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் சுகிதா மருரி, ஸ்ரீநிதி பாலாஜி ஜோடியை வீழ்த்தியது. பாட்மிண்டனில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில் தமிழக வீரர் மித்திஷ் வெண்கலப் பதக்கம் வென்றார்.




நீச்சல் போட்டியில் மகளிருக்கான 200 மீட்டர் மெட்லியில் தமிழகத்தின் ஸ்ரீநிதி நடேசன் பந்தய தூரத்தை 2:26.78 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். மகாராஷ்டிராவின் சான்வி தேஷ்வால் (2:27.64) வெள்ளிப் பதக்கமும், ஷ்ப்ரன்ஷினி பிரியதர்ஷினி (2:31.60) வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

ஆடவருக்கான 200 மீட்டர் பேக் ஸ்ட்ரோக்கில் தமிழகத்தின் நித்திக் நாதெல்லா பந்தய தூரத்தை 2:04.60 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். மகாராஷ்டிராவின் ரிஷப் அனுபம் தாஸ் (2:05.19) வெள்ளிப் பதக்கமும், கர்நாடகாவின் ஆகாஷ் மணி (2:07.25) வெண்கலப்பதக்கமும் கைப்பற்றினர். மகளிருக்கான 4x100 மீட்டர் மெட்லி தொடர் நீச்சல் போட்டியில் பிரமிதி ஞானசேகரன், எம் யு ஜாய்ஸ்ரீ, ஸ்ரீநிதி நடேசன், தீக்ஷா சிவகுமார் ஆகியோரை உள்ளடக்கிய தமிழக அணிபந்தயதூரத்தை 6:09.57 வினாடிகளில் கடந்து வெண்கலப்பதக்கம் வென்றது.

நேற்று நடந்த டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் தமிழ்நாட்டின் மாயா ராஜேஷ்வரன் ரேவதி தங்கம் வென்றுள்ளார். தெலுங்கானா வீராங்கனை டாண்டுவை 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் மாயா ராஜேஷ்வரன் ரேவதி வீழ்த்தினார். இந்த நிலையில் கேலோ இந்தியா போட்டிகள் நேற்றுடன் நிறைவு பெற்றது. கேலோ இந்தியா போட்டியில் கடந்த ஆண்டு 8-ம் இடத்தை பெற்ற நிலையில் இந்தாண்டு 2ம் இடத்தை பெற்று தமிழ்நாடு அணி சாதனை படைத்துள்ளது. 56 தங்கம், 48 வெள்ளி, 53 வெண்கலம் என 156 பதக்கங்களுடன் மகாராஷ்டிரா அணி முதலிடத்தை பெற்றது.

35 தங்கம், 22 வெள்ளி, 46 வெண்கலம் என மொத்தம் 103 பதக்கங்களை வென்று ஹரியானா அணி 3ம் இடத்தை பிடித்துள்ளது. 38 தங்கம், 20 வெள்ளி, 39 வெண்கலம் என 97 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தை பிடித்து தமிழ்நாடு அணி அசத்தியுள்ளது. கேலோ இந்தியா வரலாற்றில் தமிழகம் அதிக பதக்கங்கள் குவிப்பது இதுவே முதன்முறையாகும். இதற்கு முன்னர் புனேவில் நடந்த கேலோ இந்தியா இரண்டாவது பதிப்பில் அதிகபட்சமாக தமிழகம் 88 பதக்கங்கள் குவித்திருந்தது.

# மகளிருக்கான டி20 தரவரிசை 2–வது இடம் பிடித்தார் தீப்தி சர்மா




**துபாய் : பிப். 1,**

**மகளிர் டி20 கிரிக்கெட் போட்டி பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவின் தீப்தி சர்மா ஒரு இடம் முன்னேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார்.**

மகளிர் டி20 கிரிக்கெட் போட்டி பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வெளியிட்டது. இதில் இந்தியாவின் தீப்தி சர்மா ஒரு இடம் முன்னேறி 2-வது இடத்தை பாகிஸ்தானின் சதியா இக்பாலுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இருவரும் தலா 718 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

மற்றொரு இந்திய வீராங்கனையான ரேணுகா சிங் ஒரு இடம் முன்னேறி 10-வது இடத்தை பிடித்துள்ளார். தென் ஆப்பிரிக்காவின் நோன்குலு லேகோ லபா 3 இடங்கள் பின்தங்கி 5வது இடத்துக்கு இறங்கிஉள்ளார். முதல் இடத்தில் இங்கிலாந்தின் சோஃபி எக்கல்ஸ்டோன் 777 புள்ளிகளுடன் ஆதிக்கம் செலுத்துகிறார்.

மற்றொரு இங்கிலாந்து வீராங்கனையான சாரா கிளென் 4-வதுஇடத்தில் தொடர்கிறார். பாகிஸ்தானின் நஷ்ரா சாந்து, இலங்கையின் இனோகா ரனவீரா, மேற்கு இந்தியத் தீவுகளின் ஹேலி மெத்தியூஸ், நியூஸிலாந்தின் ஃப்ரான் ஜோனாஸ் ஆகியோர் முறையே 6 முதல் 9-வது இடங்களில் உள்ளனர்.

ஆல்ரவுண்டர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் தீப்திசர்மா 4-வது இடத்தில் தொடர்கிறார். பேட்டிங் தரவரிசையில் ஸ்மிருதி மந்தனா 4வது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஷபாலி வர்மா, ஹர்மன்பிரீத் கவுர் ஆகியோர் முறையே 13, 16, 17-வது இடங்களில் தொடர்கின்றனர். ஆஸ்திரேலியாவின் பெத் மூனி, தஹ்லியா மெக்ராத் ஆகியோர் முதல் இரு இடங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

# சுழல் ஆடுகளங்களில் இந்திய அணிக்கு இங்கிலாந்து எச்சரிக்கை கொடுத்துள்ளது

**ஹைதராபாத் : பிப். 1,**

**சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் இந்திய அணிக்கு இங்கிலாந்து எச்சரிக்கை கொடுத்துள்ளதாக முன்னாள் கேப்டன் நாசர் ஹுசைன் தெரிவித்துள்ளார்.**

இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது. ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 28 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. அந்த அணியின் வெற்றியில் ஆலி போப் விளாசிய சதமும், சுழற்பந்து வீச்சில் டாம் ஹார்ட்லி 2-வது இன்னிங்ஸில் வீழ்த்திய 7 விக்கெட்களும் முக்கிய பங்கு வகித்தன. இந்த வெற்றியால் இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் நாசர் ஹுசைன் கூறும்போது, "இந்திய அணி முதல் இன்னிங்ஸில் அதிக ரன்கள் குவிக்காதது அவர்களுக்கு வருத்தத்தை அளித்திருக்கும். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 436 ரன்கள் குவித்தது.

ஆனால், அவர்கள் விக்கெட்டுகளை பறிகொடுக்காமல் விளையாடி இருந்தால் இன்னும் அதிக ரன்களை எடுத்திருக்கலாம். இந்திய அணி இதுபோன்ற தோல்விகளில் இருந்து மீண்டு வந்துள்ளது.

இதை கடந்த கால வரலாறுகளில் இருந்து காணலாம். அதனால் அடுத்தப் போட்டி இங்கிலாந்துக்கு சவாலானதாக இருக்கும். அதே சமயம் சுழலுக்கு சாதகமான ஆடுகளங்களிலும் இங்கிலாந்தின் அதிரடி ஆட்ட அணுகுமுறை திறன்மிக்கதாக இருக்கும் என்ற எச்சரிக்கையை இந்திய அணிக்கு இங்கிலாந்து கொடுத்துள்ளது" என்றார்.

**சொல்கிறார் நாசர் ஹுசைன்**



# நடை பந்தயத்தில் சாதனையை முறியடித்தார் அக்ஷ்தீப்

**சண்டிகர் : பிப். 1,**

**தேசிய ஓபன் நடை பந்தயம் சண்டிகரில் நடைபெற்று வருகிறது.**

இதில் ஆடவருக்கான 20 கிலோ மீட்டர் நடை பந்தயத்தில் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த அக்ஷ்தீப் பந்தய தூரத்தை ஒரு மணி நேரம் 19 நிமிடங்கள் 38 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டம் வென்றார். கடந்த ஆண்டு நடைபெற்ற இதே தொடரில் அக்ஷ்தீப் இலக்கை 1:19:55 விநாடிகளில் கடந்து தேசிய சாதனை படைத்ததுடன் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றிருந்தார். தனது சொந்த சாதனையை தற்போது அவரே முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலத்தை சேர்ந்த சூராஜ் பன்வார் இலக்கை 1:19:43 விநாடிகளில் கடந்து 2-வது இடத்தை பிடித்ததுடன் ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றார். ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு பந்தய தூரத்தை 1:20:10 விநாடிகளில் அடைய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. பாரீஸ் ஒலிம்பிக்போட்டியில் 20 கிலோ மீட்டர் நடைபந்தயத்துக்கு தகுதி பெற்றுள்ள 4-வது இந்திய வீரர் சூராஜ் பன்வார் ஆவார். கடந்த ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய நடை பந்தயத்தின் வாயிலாக பிரம்ஜீத் பிஷ்ட், விகாஸ் சிங் ஆகியோரும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தனர்.




தனிநபர் டிராக் மற்றும் பீல்டு பிரிவில் ஒலிம்பிக்கில் ஒருநாட்டில் இருந்து 3 வீரர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். தற்போது 20 கிலோ மீட்டர் நடை பந்தயத்துக்கு இந்திய வீரர்கள் 4 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதில் 3 பேரை இந்திய தடகள சம்மேளனம் தேர்வு செய்து அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரலாறு சினிமா

# நடிப்பில் மீண்டும் தீவிரம் காட்டும் நடிகை சமந்தா





**சென்னை : பிப். 1,**

**நடிகை சமந்தா மீண்டும் நடிப்பில் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளார். அந்தப் படங்கள் இப்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகியுள்ளது.**

மையோசிடிஸ் நோயில் இருந்து தேறி வருகிறார் நடிகை சமந்தா. கடந்த வருடம் மையோசிடிஸ் காரணமாக சில மாதங்கள் சினிமாவுக்கு பிரேக் கொடுத்தார். ஆன்மிக பயணம், தோழிகளுடன் வெளிநாடு செல்லுதல், மருத்துவப் பயணம் என உடல்நலனும் மனநலனும் தேறி வருவதாக சொன்னார்.

இதற்கிடையில் தயாரிப்பு நிறுவனமும் தொடங்கினார். கடந்த சில மாதங்களாக சினிமாவில் அவர் நடிக்கவில்லை என்றாலும் சமூகவலைதளங்களில் ஆக்டிவாக படங்களைப் பதிவிடுவது, கேள்வி - பதில் என ரசிகர்களுடன் என்கேஜாக இருக்கிறார் சமந்தா. இந்த வருடம் சீக்கிரமே படங்களில் நடிக்கவர இருக்கும் நிலையில் 'சிட்டாடல்' மூலம் அதைத் தொடங்கி இருக்கிறார் சமந்தா.

முன்பு ஓடிடியில் வெளியான 'ஃபேமிலி மேன்' வெப் சீரிஸில் ராஜி கதாபாத்திரத்தில் ஆக்ஷனில் அசத்தினார் சமந்தா. அதேபோன்ற ஒரு ஆக்ஷன் கதாபாத்திரத்தில் தான் 'சிட்டாடல்' கதையில் நடித்துள்ளார் சமந்தா.

சர்வதேச அளவிலான இந்தக் கதையின் படப்பிடிப்பு முடிந்து, போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தொடங்கியுள்ளது. இயக்குநர்கள் ராஜ், டிகே ஆகியோருடன் சமந்தா பகிர்ந்திருக்கும் இந்தப் புகைப்படங்கள் ரசிகர்களைக் கவர்ந்துள்ளன. சீக்கிரம் தமிழ்ப் படங்களிலும் சமந்தா நடிக்க வேண்டும் என ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.

# "நான் செய்யும் உதவிகளுக்குப் பின்னால் அவமானம், கஷ்டம்" 5–வது ஆம்புலன்ஸை வழங்கிய பாலா விளக்கம்

**சென்னை : பிப். 1,**

**வாணியம்பாடி அருகே உள்ள நெக்னாமலை கிராமத்தில் பொதுமக்களுக்காக தனது சொந்த செலவில் ஆம்புலன்ஸ் ஒன்றை வழங்கியுள்ளார் பாலா. தான் செய்யும் உதவிகளுக்கு பின்னால் யாரோ இருக்கிறார்கள் என்று வரும் குற்றச்சாட்டுகளுக்கும் விளக்கம் அளித்துள்ளார்.**

சின்னத்திரை நிகழ்ச்சிகள் மூலம் பிரபலமானவர் நடிகர் பாலா. விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் 'கலக்கப் போவது யாரு', 'குக் வித் கோமாளி' உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் மூலம் பார்வையாளர்கள் மத்தியில் பிரபலமானார். ஒருசில திரைப்படங்களில் நடித்துள்ளார். இதுதவிர தொடர்ந்து இவர் எளிய மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகிறார். தனது சொந்த செலவில் இலவச ஆம்புலன்ஸ்களையும் வழங்கி வருகிறார்.

கடந்த ஆண்டு சென்னையில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி தவித்த 200 குடும்பங்களுக்கு தலா ரூ.1000 வழங்கினார். பாலாவின் இந்த செயல்களை தொடர்ந்து பலரும் பாராட்டி வருகின்றனர். இந்த நிலையில், வாணியம்பாடி அருகே உள்ள நெக்னாமலை கிராமத்தில் பொதுமக்களுக்காக தனது சொந்த செலவில் ஆம்புலன்ஸ் ஒன்றை வழங்கியுள்ளார் பாலா. இந்த கிராமத்தில் சுமார் 172 குடும்பங்கள் வசித்து வருகின்றன.



இது குறித்து செய்தியாளர்களிடம் பாலா, "இந்த கிராமத்தில் ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் ஒரு கர்ப்பிணி பெண்ணை கயிறு கட்டி கீழே இறக்கியதாக ஒரு செய்தி பார்த்தேன். இங்கு வந்து பார்த்தபிறகு தான் தெரிந்தது, அப்படி கயிறு கட்டி இறக்கும்போது நிறைய பெண்களுக்கு பாதிவழியிலேயே பிரசவம் ஆகிவிடுறது என்று. இந்த கிராமத்துக்கு ஏறிவருவதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே இந்த ஐந்தாவது ஆம்புலன்ஸை இந்த கிராமத்துக்கு வழங்கியுள்ளேன். எனக்கு தொடர்ந்து ஆதரவு தருபவர்களுக்கு மிக்க நன்றி.

உங்களுக்கு பின்னால் யார் இருக்கிறார்கள் என்று தொடர்ந்து சமூக வலைதளங்களில் கேள்வி எழுப்புகிறார்கள். நான் செய்யும் உதவிகளுக்கு பின்னால் யாரோ இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆமாம், இருக்கிறார்கள் தான். அது அவமானம், கஷ்டம் ஆகியவை. இவையெல்லாம் என் பின்னால் இருந்ததால்தான் நான் இந்த உதவிகளை செய்து வருகிறேன். "எதிர்காலத்தில் நீ சிக்னல்ல பிச்சை எடுப்பாய். அப்போதுகூட நான் உனக்கு பிச்சை போடாமல்தான் போவேன்" என்று சிலர் கமெண்ட் செய்கிறார்கள். நான் எந்த சிக்னலில் பிச்சை எடுக்கிறேனோ அதே சிக்னலில் நான் கொடுத்த ஆம்புலன்ஸும் வரும். எனவே எனக்கு அது ஒரு பிரச்சினை இல்லை" என்று தெரிவித்தார்.

# 'நான் தான் வளர்த்து விட்டேன்' இயக்குனருக்கு பதிலடி தந்த ஐஸ்வர்யா ராஜேஷ்

**சென்னை : பிப். 1,**

**ஐஸ்வர்யா ராஜேஷ் குறித்த இயக்குனர் வீரபாண்டியன் பேசிய விஷயம் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளானது.**

வீரபாண்டியன் பேசும்போது, 'ஐஸ்வர்யா ராஜேஷை திரை உலகிற்கு நான்தான் அழைத்து வந்தேன். எனது படத்தில் அவர் அறிமுகமானார். ஆனால், இந்த விஷயத்தை ஐஸ்வர்யா ராஜேஷ் எந்த பேட்டிகளிலும் கூறவில்லை.. தற்போது ஐஸ்வர்யா ராஜேஷ் வளர்ந்த நட்சத்திரமாக ஆன பிறகு முதல் படத்தை இயக்கிய தன்னுடன் பணியாற்ற விரும்பவில்லை.

இது மட்டுமல்ல, ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்க வந்தபோது ஆட்டோவுக்கு கூட அவரிடம் பணமில்லை. நான்தான் பணம் கொடுத்தேன். அவரிடம் நன்றியே இல்லை' என்றார். இயக்குனர் வீரபாண்டியன் பேசிய இந்த விஷயம் கேட்டு, சமூக வலைத்தளங்களில் ஐஸ்வர்யாவை பலரும் விமர்சனங்கள் செய்தனர். இதற்கு ஐஸ்வர்யா ராஜேஷ் எந்த விளக்கமும் கூறாத நிலையில், திடீரென தனது எக்ஸ் தள பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அந்தபதிவில், 'நிறையபேர் ஒரு பக்க கதையை மட்டுமே கேட்டுவிட்டு பேசுகிறார்கள். விஷயம் நடந்த இடத்தில் இல்லாத விஷயங்களை தெரிந்து கொள்ளாமல் ஒருவரை பற்றி நிர்ணயிப்பது வாழ்க்கையையும் உறவையும் கெடுத்துவிடும். அதனால் மொத்த கதையையும் தெரிந்து கொண்ட பின்பு ஒருவரை நோக்கி குற்றச்சாட்டுகளையும் ஒருவரை நோக்கி தாக்குதல்களையும் செய்ய வேண்டும்' என குறிப்பிட்டிருக்கிறார். இதன் மூலம் வீரபாண்டியனுக்கு ஐஸ்வர்யா பதிலடி கொடுத்திருப்பதாக நெட்டிசன்கள் கூறுகின்றனர்.



# "அப்பா எனக்காக அழுதிருக்கிறார்" – 'ப்ளூ ஸ்டார்' வெற்றி விழாவில் சாந்தனு உருக்கம்

**சென்னை : பிப். 1,**

**"அப்பா என் வெற்றிக்காக ஏங்கி கண்ணீர்விட்டு அழுததாக அம்மா சொல்லியிருக்கிறார். அவரது கண்ணீரைத் துடைக்கும் வெற்றி 'ப்ளூ ஸ்டார்' படம் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது" என நடிகர் சாந்தனு உருக்கமாக தெரிவித்துள்ளார்.**

இயக்குநர் ஜெயக்குமார் இயக்கத்தில் அசோக் செல்வன், சாந்தனு, கீர்த்தி பாண்டியன் நடிப்பில் திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கும் 'ப்ளூ ஸ்டார்' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில் படத்தின் வெற்றி விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய நடிகர் சாந்தனு, "என்னுடைய ஒவ்வொரு படத்தின் மேடையிலும் சொல்வார்கள், 'வெற்றி விழாவில் சந்திப்போம்' என்று. ஆனால், இன்று என் வாழ்வில் அப்படியொரு தருணம் அமைந்துள்ளது.

என்னால் இதை நம்பவே முடியவில்லை. மிகவும் எமோஷனலாக உணர்கிறேன். எனக்கு இந்த வெற்றியை கொடுத்த உங்களுக்கு நன்றி. என் வாழ்வில் இவ்வளவு பாசிடிவ் ரிவியூ கிடைத்ததில்லை. 'சக்கரக்கட்டி' ரிலீஸுக்குப் பின் 15 வருடங்கள், 5,600 நாட்களுக்குப் பிறகு எனக்கு வெற்றி கிடைத்துள்ளது. எல்லாவற்றையும் தாண்டி என்னுடைய பெற்றோருக்கு இந்த வெற்றி பெறும் சந்தோஷத்தை கொடுத்தது.



என்னைவிட 100 மடங்கு என்னுடைய அப்பா, அம்மா தான் வெற்றிக்கான ஏக்கத்தில் இருந்தனர்.

15 வருடம் எனக்கும், அப்பாவுக்கும் இந்த ஏக்கம் இருந்தது. அதனை எனது அப்பா கடிதமாக எழுதியிருந்தார். "நான் நிறைய பேரை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு வெற்றி கொடுத்திருக்கிறேன். ஆனால் என் பையனுக்கு வெற்றியை கொடுக்க முடியவில்லையே" என என் அப்பா கண்ணீர்விட்டதாக அம்மா சொல்லியிருக்கிறார். அன்றைக்கு நான் யோசித்தேன். அந்த கண்ணீரை துடைக்கும் அளவுக்கு ஒரு வெற்றிகிடைத்தால் எனக்கு போதும், அது இன்று 'ப்ளூ ஸ்டார்' மூலமாக கிடைத்துள்ளது மிக்க மகிழ்ச்சி. இந்த நன்றியை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன்" என்றார் உருக்கமாக.

# ‘தேர்தல் உரை’ போலவே குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை: எதிர்க்கட்சிகள் விமர்சனம்







# தமிழக காவல்துறை ஐஜி.,க்கள் கண்ணன் நரேந்திரன் நாயர் ஆகியோரை பணி இடமாற்றம்

# தமிழகத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்த திமுக அரசு அனுமதிக்காது




சென்னை / புதுக்கோட்டை | 01.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பம்மல் சம்பந்த முதலியார் , தமிழ் நாடகத் தந்தை (பி.1873) (இ.1964)



பொ. ம. இராசமணி , தமிழகத் தமிழறிஞர் (பி.1936) (இ.2009)



குரு , தமிழக அரசியல்வாதி (பி.1961) (இ.2018)



சோயிப் மாலிக் , பாக்கித்தானியத் துடுப்பாட்ட வீரர் (பி.1982)



## இன்றைய நினைவு நாள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை , தமிழறிஞர் (பி.1815) (இ.1876)



நயின் சிங் ராவத் , இந்திய நில அளவியலாளர் (பி.1830) (இ.1882)



கல்பனா சாவ்லா , இந்திய-அமெரிக்க விண்வெளி வீராங்கனை (பி.1961) (இ.2003)



ஏ. நாராயணன் , தமிழகத்தின் முதல் பேசும் பட ஒலிக் கலையகத்தை அமைத்தவர் (பி.1900) (இ.1939)

